விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 137 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 22 வியாழக்கிழமை (05.05.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### அழுத்தங்களுக்கு அடிபணிந்து
# பதவியிலிருந்து விலக மாட்டேன்
### மகிந்த மீண்டும் தெரிவிப்பு



(கொழும்பு)

**அழுத்தங்களுக்கு அடிபணிந்து பிரதமர் பதவியிலிருந்து விலகமாட்டேன் என மகிந்த ராஜபக்ஷ மீண்டும் தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

15

## நாடு நாளை முற்றாக முடங்கும்
### நாடு தழுவிய ஹர்த்தாலுக்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு

(கொழும்பு)

நாளை நாடு முழுமையாக முடங்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

15

### போராட்டக்காரர்கள் கைது
## அமெரிக்க தூதுவர் கண்டனம்

(கொழும்பு)

பாராளுமன்ற சுற்றுவட்டத்தில் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்தமைக்கு அமெரிக்க தூதுவர் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.


Ambassador Julie Chung
@USAmbSL

The freedom to engage in peaceful protest without fear of arrest is fundamental to democracy. The US urges restraint on all sides and reiterates our support for the rights of. peaceful protesters.

4:40 PM · May 4, 2022

டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அவர் இதனைக்

15

### பிரதி சபாநாயகர் தெரிவு
## பாராளுமன்றில் இன்று வாக்கெடுப்பு

(கொழும்பு)

நாடு பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் நிலையில், பிரதி சபாநாயகரைத் தெரிவு செய்வதற்கான

15

### ராஜபக்ஷ அரசாங்கம் செய்த
# வரலாற்றுத் தவறே நெருக்கடிக்கு காரணம்
### பாராளுமன்றில் நிதி அமைச்சர் அலி சப்ரி



- பொருளாதார நெருக்கடியை தீர்க்க சுமார் 2 வருடங்களுக்கு அதிகமாக செல்லும்.
- வெளிநாட்டு கையிருப்பு 50 மில்லியன் அமெரிக்க டொலருக்கு குறைவாக உள்ளது.
- சர்வதேச நாணய நிதியத்திடம் முன்னதாகவே சென்றிருக்க வேண்டும்.

*(15 ஆம் பக்கம் பார்க்க)*

## கிணற்றில் தவறிவிழுந்த 3வயது சிறுவன் பலி
### ஊரெழு மேற்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வீட்டுக் கிணற்றில் தவறிவிழுந்த 3 வயதுச் சிறுவன் ஒருவன் மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளான்.

யாழ்ப்பாணம், ஊரெழு மேற்கில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் இந்தச்

15

### யாழ். கடற்பரப்பில்
## 123 மில்லியன் பெறுமதியான 492 கிலோ கஞ்சாவுடன் இளைஞன் கைது

06

## நாடு இருளை நோக்கி செல்கின்றது
## மகிந்த, கோட்டா பதவி விலக வேண்டும்
### சபையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து



(கொழும்பு)

"இந்த ஜனாதிபதி அல்லது பிரதமரின்கீழ் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. நாடு வெளிச்சத்துக்குப் பதிலாக இருளை நோக்கியே செல்கின்றது. எனவே, மக்களின் கோரிக்கைக்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் பிரதமர் மகிந்த ராஜபக்சவும் உடனடியாகப் பதவி விலக வேண்டும்."

இவ்வாறு எதிர்க்

15

### அலரி மாளிகை வளாகத்தில்
## மீண்டும் கூடாரங்களை அமைத்து போராட்டம்

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் அலரி மாளிகைக்கு முன்பாக பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளவர்களை உடனடியாக அகற்றுமாறு கோட்டை நீத

15

## 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும்
### சபையில் மனோ கணேசன்

(கொழும்பு)

"இடைக்கால அரசு அமையு... 20ஆவது திருத்தச் சட்டத்துக்கு முடிவு கட்டப்பட வேண்டும்."

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் நேற்று பாராளுமன்றத்தில் தெரி

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# யாழ்.பல்கலைக்கு இந்.துணைத் தூதுவர் விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதுவராலயத்தின் துணைத் தூதுவர் ஜே. ராகேஷ் நட்ராஜ் நேற்று புதன் கிழமை காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மரியாதை நிமிர்த்தமான விஜயமொன்றினை மேற்கொண்டிருந்தார்.

யாழ் . பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை சந்தித்து நிலைமைகளைக் கேட்டறிந்தது டன் இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்படும் திட்டங்கள் மற்றும் இந்திய அரசாங்கத்தின் புலமைப் பரிசில்கள் தொடர்பிலும் நேற்றைய சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டது. (ம-7,33,104)


மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

**சிவபூமி அறக்கட்டளை - இலங்கை புற்றுநோய் சிகிச்சை பிரிவில் சிகிச்சைபெறும் நோயாளருக்கான சத்துமா அன்பளிப்பு**

வசதிகுறைந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் வைத்திய அத்தாட்சி பத்திரத்துடன் (கிளினிக் கொப்பி) 05.05.2022 ஆம் திகதி கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலில் அமைந்துள்ள சிவபூமி பாடசாலை மண்டபத்திற்கு வருகை தரவும்.

பெண் நோயாளர்கள் - காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரையும்.

ஆண் நோயாளர்கள் - பகல் 11.00 மணிமுதல் 1.00 மணி வரையும்.

நிர்வாக சபை,
சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்.

(C-4283)


# மேலும் 40 ஆயிரம் மெட்ரிக்தொன் பெற்றோல் வழங்கியது இந்தியா

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து நேற்று 40 ஆயிரம் மெட்ரிக்தொன் பெற்றோல் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் டுவிட்டரில் தெரிவித்துள்ளது.

இலங்கை மக்களுக்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் வகையில் இதுவரை 440,000 மெட்ரிக்தொன் வெவ்வேறு வகையிலான எரிபொருட்களை இந்தியா வழங்கியுள்ளதாக குறித்த டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், எதிர்காலத்தில் அதிக எரிபொருட்கள் வழங்கப்படும் என்றும் இந்திய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது. (ம-7)

# பாராளுமன்றில் பசிலுக்கு 33 ஆவது ஆசனம்



முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு ஆளும் கட்சியின் பின் வரிசையில் 33 ஆவது ஆசனம் பாராளுமன்ற பிரதானிகளால் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த ஆசனத்திலேயே நேற்று அவர் அமர்ந்திருந்தார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்படுவதற்கு முன்னர் முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ சபையில்ஆளும்கட்சியின் முன்வரிசை ஆசனத்தில் அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பொன்னாலையில் கஞ்சாவுடன் பிடிபட்டவர் தப்பி ஓட்டம்

(அராலி)

பொன்னாலை ஊடாக காரைநகருக்கு கஞ்சா கொண்டு சென்றவரை இளைஞர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றபோது குறித்த நபர் கஞ்சாவையும்கைத்தொலைபேசியையும் கைவிட்டுத் தப்பிச் சென்றார்.

இச்சம்பவம் நேற்று புதன் கிழமை மாலை இடம்பெற்றது.

இது தொடர்பில்மேலும் தெரிய வருவதாவது,

நபரொருவர் கஞ்சா கொண்டு செல்கின்றார் என பொன்னாலையைச் சேர்ந்த இளைஞர்கள் சிலருக்கு கிடைத்த தகவலையடுத்து அவரை வழிமறித்த இளைஞர்கள் விசாரணை நடத்தினார்கள்.

இதன்போது அவரிடம் கஞ்சா இருந்தமை கண்டறியப்பட்டது.

அவரை வட்டுக்கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைப்பதற்காகக் கொண்டு சென்றபோது திடீரென்று அவர் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றுள்ளார். (ம-7,104)

# மொரட்டுவயில் துப்பாக்கிச் சூடு

## ஒருவர் காயம்

(கொழும்பு)

மொரட்டுவ - கொரல வெல்ல பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

உந்துருளியில் பயணித்த இருவர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த நபர் பாணந்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-7)

# மரண அறிவித்தல்

## பொன்னையா சிவஞானம்

பிறப்பு 17.06.1948 இறப்பு 03.05.2022



உடுப்பிட்டி இமையாணன் மேற்கு, துவாளி வீதியைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கு, அல்வாயை வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா சிவஞானம் அவர்கள் 03.05.2022 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் உதயநாகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அமரசிங்கம், துரைச்சாமி, கமலாதேவி மற்றும் தபோதினி, வியாகேசு *(Director - Becon Tution)*, லீலாவதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் விநாயகமலர், அருந்தவமலர், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சீனிவாசகம் மற்றும் சுமதி, மாணிக்கவாசகர் (கனடா), காலஞ்சென்றவர்களான யோகமலர், மண்டலேஸ்வரன் மற்றும் அனந்தேஸ்வரன், மதனமோகன், முரளிதரன், கௌரிசங்கர் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவசங்கர் *(Quantity Surveyor - Australia)*, ஷாலினி *(MSO* - பிரதேச செயலகம் - மருதங்கேணி), உதயசங்கர் *(Quantity Surveyor - Qatar)* ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜனனி *(Doctor)*, லக்குமணன் *(DO*-பிரதேச செயலகம் - மருதங்கேணி), டயதுணா *(DO* - ஆதார வைத்தியசாலை - புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் லவன்ஷன், நிலான்ஷன், மிதுனன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (05.05.2022) வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

077 160 5069, 077 420 5560, 077 222 2563

(C-4282)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற நுழைவாயிலில் பதற்றம்
## ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை
# கைது செய்த பொலிஸார்

**(கொழும்பு)**


**பொல்துவ சந்தியில் உள்ள பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

இந்த சம்பவம் காரணமாக அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பெண்கள், ஆண்கள் என அப்பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பேர் கைது செய்யப்பட்டனர்.

தாம் செய்த தவறு என்ன என்பதை தெரிவித்து பின் தம்மை அழைத்துச் செல்லுமாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ள போதும் பெருந்திரளான பொலிஸார் குறித்த இடத்தில் குவிக்கப்பட்டு அனைவரும் பொலிஸ் வண்டிகளில் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளனர்.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்த 12 பேரும் பாராளுமன்ற நுழைவு வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவித்து கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)

# கைதானவர்களை விடுவிக்கக்கோரி பொலிஸ் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

பொல்துவ சந்தியில் உள்ள பாராளுமன்ற நுழைவாயில் பகுதியில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகரகம பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக கைது செய்யப்பட்டவர்களுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. (4)

# பிரதி சபாநாயகர் பதவி விலகினார்

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய பதவி விலகியுள்ளதாக ஜனாதிபதி செயலகம் கடிதம் அனுப்பியுள்ளதென சபாநாயகர் தெரிவித்தார். நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின் போதே சபாநாயகர் இந்த அறிவிப்பை வெளியிட்டார். (4)

# பாராளுமன்ற உறுப்பினர்களை துன்புறுத்த முற்பட்டவர்களையே கைது செய்தோம்
## பொது பாதுகாப்பு அமைச்சு விளக்கம்

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு அருகில் பாராளுமன்ற உறுப்பினர்களை கொச்சைப்படுத்தி அவர்களை துன்புறுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுவொன்று முயற்சித்ததாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களை சுதந்திரமாக நடமாட அனுமதிப்பது தொடர்பில் நேற்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கட்சித் தலைவர்கள் மற்றும் சபாநாயகர் ஆகியோரின் வேண்டுகோளுக்கு இணங்க பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாக நடமாடுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (4)


# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி.சுஜித்தா பகீரதன்
அவர்களின் அன்பு மாமனார்
திரு. தனுக்கோடி குணரட்ணம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம்: 1934.09.03
மறைவு: 2022.05.04

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்.

(1127)


# 'இலஞ்ச வீதி'
# காலிமுகத்திடல் வீதிக்கு புதிய பெயர் சூட்டப்பட்டது



(கொழும்பு)

ஜனாதிபதி அலுவலகத்திற்கு அருகிலுள்ள காலிமுகத்திடலுக்கு போராட்டக்காரர்கள் புதிய பெயரை சூட்டியுள்ளனர்.

அதன்படி, குறித்த வீதிக்கு இலஞ்ச வீதியென (BROBE ROAD) போராட்டக்காரர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

ஏற்கனவே, காலிமுகத்திடலில் "கோட்டா கோ கம" எனும் பெயரிலான கிராமத்தை உருவாக்கியுள்ள போராட்டக்காரர்கள் அங்கு கூடாரமிட்டு 26 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (4)


# கண்ணீர் அஞ்சலி

திருமதி.மல்லிகாதேவி ஞானேந்திரன்



ஆசிரியர்/பகுதித் தலைவர்
(ஆரம்பக் கல்வி)
யா/மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.
காங்கேசன்துறை

எமது பாடசாலையில் 2010 தொடக்கம் இற்றைவரை பன்னிரண்டு வருடங்களாக அர்ப்பணிப்புள்ள சேவையாற்றி அமரத்துவம் அடைந்த ஆசிரியைக்கு எங்கள் இதய அஞ்சலியை கண்ணீருடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்.
யா/ மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி. காங்கேசன்துறை.




யாழ்.போதனா மருத்துவமனையின் இரத்த சுத்திகரிப்பு பிரிவுக்கு (டயலிசஸ் சிகிச்சை) அவசர மருந்துத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக யாழ்.போதனா மருத்துவமனையின் பிரதிப்பணிப்பாளர் மருத்துவ கலாநிதி பவானந்தராஜா மற்றும் மருத்துவ நிபுணர் பிரமா தங்கராஜா ஆகியோரிடம் நேற்று சிவபூமி அறக்கட்டளை தலைமையகத்தில் வைத்து அறக்கட்டளை தலைவர் கலாநிதி.ஆறு. திருமுருகனால் ரூபாய் ஒரு மில்லியன் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

(படம்: சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டி





வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெண்களிற்கான வொலிபோல் போட்டியில் 16,18 வயதுப் பிரிவுகளில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியும், 20 வயதுப் பிரிவில் இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும் முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டன.

இதன் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

16 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை அளவெட்டி அருணோதயா கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும், மூன்றாமிடத்தை நடேஸ்வரா கல்லூரி அணியும் பெற்றன.

18 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமி டத்தை அளவெட்டி அருணோதயா கல்லூரி அணியும் இரண்டாமிடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும் பெற்றன.

20 வயதிற்குட்பட்ட பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை இளவாலை மெய்கண்டான் வித்தியாலய அணியும் இரண்டாமிடத்தை அளவெட்டி அருணோதயா கல்லூரி அணியும் பெற்றன.

(4-90)



யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான வ்லைப்பந்தாட்டப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. ஆட்டம் ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திய யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி 10:1 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3ம் இடத்தை அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அணி பெற்றது.

(படம்: கனகராஜா)



யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுப் பிரிவினருக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் நேற்று புதன்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் கல்லூரி அணி மோதியது.

ஆட்டத்தில் ஏக ஆதிக்கம் செலுத்திய சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி 20:9 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது. 3ஆம் இடத்தை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலய அணி பெற்றது. (படம்:- கனகராஜா)




## தர்சி

என்னம்மா அப்பிடி பாக்கிறா...
நான் தான் கால் கிலோ சீனிக்கு கால் கடுக்க நின்னிட்டு வந்த உன் புள்ள..



## குருபரன்

இப்போ இருக்கிற நைக், பூமா லாம் சும்மா இது கிட்ட கூட நெருங்க முடியாது



அப்படி நீடித்து உழைக்கும் அறுந்தாலும் பின்னு போட்டு ஓட்டுவோம்.

## மிதுலா



குரைக்கும் ஒவ்வொரு நாய்க்கும் பதில் சொல்லிக்கொண்டே இருந்தால் குறிக்கோளை என்றும் அடைய முடியாது


## ராஜன்

விசேச வீட்டுக்கு சென்றால் பையன் சாப்பிட்டானான்னு வருத்தப்பட்டா, அது "அம்மா"



கையோட நாலு இட்லியை பார்சல் கட்டிட்டு வந்தா அது "பாட்டி"...!!

## நிரூப்



ஸ்டாண்டுக்கு பாதம் வச்சது சரி அந்த பாதத்துக்கு செருப்பை போட்ட பாரு! அங்க நிக்கிறையா நீ!

## நவீஸ்

திருமண வாழ்வு சரியாக அமையாவிட்டால் அதற்கு காரணம் எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்கள் அல்ல



அங்கே இருக்கும் இரண்டு பிடிவாதமான இதயங்களே..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் பலி

(ஏறாவூர்)

மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாமந்தியாற்றுப்பகுதியில் யானை தாக்கி விவசாயி ஒருவர் பலியான சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

72 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான ஒருவரே இச்சம்பவத்தில் உயிரிழுந்தவராவார்.

நெற்செய்கை செய்து மாடு வளர்ப்பிலும் ஈடுபடும் குறித்த நபர் சம்பவ தினத்தன்று தனது வயலில் உள்ள வாடியில் காவலில் இருக்கும் போது யானையின் தாக்குதலுக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது. (4)

# ஊடக சுதந்திர தரப்படுத்தலில் பின்னோக்கி நகர்ந்த இலங்கை

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர சுட்டியில், இலங்கை 19 இடங்கள் பின்னோக்கி தரப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பு, 2022 ஆம் ஆண்டுக்கான உலக ஊடக சுதந்திர சுட்டியை வெளியிட்டுள்ளது.

180 நாடுகளைக் கொண்ட இந்தப் பட்டியலில், கடந்த ஆண்டு 127 ஆவது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், இந்த ஆண்டு 146 ஆவது இடத்தில் இலங்கை தரப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 142 ஆவது இடத்தில் பதிவாகியிருந்த இந்தியா, இந்த ஆண்டு 150 ஆவது இடத்தில் பதிவாகியுள்ளது.

முதலாம் இடத்தில், நோர்வேயும், இரண்டாம் இடத்தில் டென்மார்க்கும் பதிவாகியுள்ளன.

சுவீடன், எஸ்தோனியா, பின்லாந்து முதலான நாடுகள் முறையே அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இச்சுட்டியில், பிரித்தானியா 24 ஆவது இடத்திலும், அமெரிக்கா 42 ஆவது இடத்திலும், ரஷ்யா 155ஆவது இடத்திலும், பாகிஸ்தான் 157 ஆவது இடத்திலும், சீனா 175 ஆவது இடத்திலும் பதிவாகியுள்ளன. (4)

# மரண அறிவித்தல்

மலர்வு
23 – 05 – 1937



உதிர்வு
03 – 05 – 2022

## அமரர்.திரு.முத்தையா செல்லத்துரை

கச்சேரியடி அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட திரு.முத்தையா செல்லத்துரை அவர்கள் 03.05.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

இவர் செல்வமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற முத்தையா இராசம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தையா இரத்தினத்தின் அன்பு மருமகனும், சந்திரராஜன் (கனடா), சந்திரமோகன், சந்திரமாலா (கனடா), சந்திரபவான் (கனடா), சந்திரரூபா, சந்திரதாசன் (கனடா), சந்திர பவானி, சந்திரவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ச.ஜெரின் (கனடா), ச.சிவசோதி, காலஞ்சென்ற உருத்திரசிங்கம், ச.சிவாஜினி (கனடா), சிவானந்தராஜா, ரொஷாலி வலினா (கனடா), தவராசா, சிவபாலன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ராஜன் (கனடா), சேரா (கனடா), கிருசாந்தி, கிருலக்ஷனா, பிருந்தன் (கனடா), சபீனா (கனடா), விபுஷன் (கனடா), வினுஷா, ஷம்போல் (கனடா) ஹெர்ரியல் (கனடா), அன்ரு (கனடா), டிலக்ஷன், திலக்ஷன், சேருகன், கேசிகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 06.05.2022 வெள்ளிக்கிழமை நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் (11266)

தொடர்புகளுக்கு :-
சிவபாலன் (சுண்ணன்) - 077 873 7005
சிவா (077 575 6991)
தவராசா (076 885 1458)

தகவல் :-
குடும்பத்தினர்.

# ஆங்கில வகுப்புக்கள்

தரம் 6-12 வரையான வகுப்புக்கள் நடைபெறும். பல்கலைக்கழக மாணவர்களுக்கான மொழிபெயர்ப்பு, Decitation என்பன தரமான முறையில் ஆவணப்படுத்தி தரப்படும். அனைவரும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 534, Navalar Road, Jaffna. T.P: 076 524 4793.

தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும் (11268)

தி.ஞானேஸ்வரன் BA. Lit (Eng)

## கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது)

### 2022 ஆம் ஆண்டுக்கான கிளைக்குழுத் தெரிவுக்கான அறிவித்தல்

காலம் : 07.05.2022 சனிக்கிழமை முற்பகல் 10.00

| | |
|---|---|
| 01. 240 கோப்பாய் வடக்கு | தலைமைக்காரியாலயம், பருத்தித்துறை வீதி, கோப்.தெற்கு. |
| 02. 241 இருபாலை | இருபாலை கிளை நிலையம், அரசடி வீதி, இருபாலை. |
| 03. 242 நீர்வேலி வடக்கு | தலைமைக் காரியாலயம், பருத்தித்துறை வீதி, கோப்.தெற்கு. |
| 04. 243 நீர்வேலி தெற்கு | தலைமைக் காரியாலயம், பருத்தித்துறை வீதி, கோப்.தெற்கு. |
| 05. 244 ஊரெழு | காந்திஜி ச.ச.நிலையம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 06. 245 அச்செழு | அச்செழு கிளை நிலையம், அச்செழு, பூலசிட்டி. |
| 07. 246 உரும்பிராய் மேற்கு | காந்திஜி ச.ச.நிலையம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |
| 08. 247 டிப்போ | உதயசூரியன் ச.ச. நிலையம், செல்வபுரம் உரும்பிராய். |
| 09. 249 கட்டைப்பிராய் | கலைவாணி ச.ச. நிலையம், புதிய செம்மணி வீதி, ஆனந்தபுரம். |
| 10. 250 கோப்பாய் சந்தி | தலைமைக் காரியாலயம், பருத்தித்துறை வீதி, கோப்.தெற்கு. |
| 11. 252 பொக்கணை | காந்திஜி ச.ச.நிலையம், உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். |

குறித்த கிளைகளுக்கான அறிவித்தல் கடிதம் குறித்த தவிசாளரினால் தனித்தனியாக அனுப்பப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்கப் பெறாதவர்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு கிளைக்குழுத் தெரிவுகளில் குறித்த நேரத்திற்கு கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு சேவையிலுள்ள, செயலாளர். (C-4280)

# இராசிபலன்

05.05.2022
சித்திரை 22, வியாழக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 8.46 மணிவரை

திருவாதிரை முழுவதும்
சுபநேரம் 7.26-8.56 மணிவரை
இராகுகாலம் 1.26-2.56 மணிவரை

சந்திராஷ்டமம்- அனுசம்

வளவன்




குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், சவால்களை சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கும் நாள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள்.




தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உறவினர் வழியில் மன நிறைவான செய்தியொன்று வந்து சேரலாம்.




சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், இல்லத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கௌரவமான நாள்.




தொலைபேசி வழியில் சுப் தகவல்கள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




செய்தொழிலில் மேன்மையுண்டு, இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பிரயாண பயமுண்டு.




நட்பு வட்டம் விரிவடையும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் விரயங்கள் ஏற்படலாம், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.




காலைப்பொழுதே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், செய்தொழிலில் புதிய திட்டங்கள் தீட்டி ஆதாயம் காண முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.




அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய நபர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

சோம்பேறிகளுக்கு எல்லா நாட்களும் விடுமுறையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 123 மில்லியன் பெறுமதியான கஞ்சாவுடன் இளைஞன் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு நடத்தப்பட்ட கடற்படையினரின் சோதனை நடவடிக்கையின் போது 123 மில்லியன் ரூபாய் பெறுமதியான 492 கிலோ கஞ்சாவுடன் 20 வயது இளைஞன் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

கடல் மார்க்கமாக வெளிவரும் போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட பரந்தளவிலான சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்க கடற்படையினர் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் சந்தேகத்திற்கிடமான படகு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து படகை சோதனையிட்டபோது 15 சாக்குகளில் அடைக்கப்பட்ட 225 பொதிகளில் சுமார் 492 கிலோகிராம் கேரளக் கஞ்சாவை மீட்டதுடன், கேரளக் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருந்த படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ்சாவின் மொத்த மதிப்பு ரூ.123 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கும் என நம்பப்படுகிறது.

கைது செய்யப்பட்ட இளைஞனையும் கேரளக் கஞ்சா மற்றும் படகையும் கடற்படையினர் மேலதிக விசாரணைக்காக வட்டுக் கோட்டை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (4-6-33-104)

# நவாலியில் கசிப்புடன் சந்தேக நபர் ஒருவர் கைது



(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரி விற்குட்பட்ட நவாலி பகுதியில் வைத்து 185 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு மற்றும் கசிப்பு காய்ச்சும் உபகரணங்கள் என்பவற்றுடன் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில், மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் மேற் கொண்ட சுற்றிவளைப்பு நடவ டிக்கையிலேயே குறித்த சந்தேக நபர் இவ்வாறு கைது செய்யப்பட் டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர், கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதி மன்றத்தில் முற்படுத்தவுள்ள தாக மானிப்பாய் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (4-6-104)



மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் யாழ்.வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மற்றும் பெண் தலைமைத்துவத்தைக் கொண்ட 260 குடும்பங்களுக்கு 3350 ரூபா பெறுமதியான அத்தியாவசியமான இடர் கால உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-ஜோசப்நயன்)

## நினைவு தினமும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக முன்னாள் பொருளியல் துறைத்தலைவர் அமரர்.நல்ல தம்பி பேரின்பநாதனின் 45 ஆம் நாள் நினைவு தினமும் நூல் வெளியீடும் எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை மதியம் 2 மணியளவில் யாழ்.பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது. (4-6)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

கைதடி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஒழுங்கமைப்பில் மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை கைதடி வளர்மதி சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

தற்போதைய நிலையில் அதிகரித்த இரத்தத் தேவையைக் கருத்திற் கொண்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள .இந்த இரத்த தான முகாம் நிகழ்வில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## ஏழாலை முடி மன்னர் ஆலய பெரும் பொங்கல்

(ஏழாலை)

ஏழாலை மத்தி சிவகுரு வீதியில் ஏழு ஆலயங்களுக்குச் செல்வோர்க்கு வழிவிடும் தெய்வமாக அருள் புரியும் ஏழாலை முடி மன்னர் ஆலய பெரும் பொங்கலுக்கான விளக்கு வைக்கும் நிகழ்வு நேற்று இரவு ஆரம்பமானது. பொங்கல் நிகழ்வானது எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெறும் என ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (4-6-26)



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்றிருந்த கோப்பாய் சுப்பிரமணிய கோட்டை முதல்வர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், கந்தர்மட வேதாந்த மடத்தின் எட்டாவது குரு பீடாதிபதி ஸ்ரீவேத வித்யாசாகரர் சுவாமிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழகத் தலைவர் அண்ணாமலை மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினர். (படம்:-ரவிசாந்)



வயலூரான் செ.சுதாகரன் எழுதிய பாலர் பைந்தமிழ்ப் பாடல்கள் எனும் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (படம்:-ரவிசாந்)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

நல்லூர் சிவன் கோவிலென அழைக்கப்படும் கமலாம்பிகா சமேத கைலாசநாதர் சுவாமி ஆலய தேவி மஹோற்சவம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறும்.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 17 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 8 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், அன்றையதினம் இரவு 7 மணிக்கு திருக்கல்யாணம் கொடியிறக்க உற்சவம் நடைபெறும். (4-6-18)

# யாழ்.இந்துக்கல்லூரி மாணவ முதல்வர் தினம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் தினம்-2022 நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை-08 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் கல்லூரியின் சிரேஷ்ட மாணவ முதல்வன் லக்ஸ்மன் லவன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறைத்தலை வர் கலாநிதி. ச.முகுந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (4-6-18)




# 490 கிலோ கஞ்சாவுடன் யாழில் ஒருவர் கைது



(அராலி)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்ட 490 கிலோ கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் நேற்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மண்டைதீவுப் பகுதியூடாகக் கடத்த முயன்ற கஞ்சாவே இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இதன்போது குருநகரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீண்ட இடைவெளியின் பின்பு அதிகளவான கஞ்சா பிடிக்கப்பட்டுள்ளதோடு இதன் பெறுமதி 10 கோடி ரூபாவையும் தாண்டும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (4-6-33-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசை நிறுவி நெருக்கடிகளுக்கு தீர்வு

## சட்டத்தரணிகள் சங்கம்

(கொழும்பு)

**நாட்டின் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காண்பதற்காக 15 பேர் கொண்ட அனைத்துக் கட்சி அமைச்சரவையையும், அதற்கு ஆலோசனை வழங்குவதற்காக நிபுணர்கள் அடங்கிய ஆலோசனை சபை ஒன்றையும் நிறுவ வேண்டுமென இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

தற்போதைய நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கான யோசனையை நேற்று முன்தினம் கண்டி மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகாநாயக்க தேரர்களிடம் முன்வைத்த பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்டபோது சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

20 ஆம் திருத்தச் சட்டத்தை நீக்கி, 19 ஆம் திருத்தச் சட்டத்தை உடன் அமுலாக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை, குறிப்பிட்ட காலத்திற்குள் நீக்கப்பட வேண்டும்.

அவநம்பிக்கை பிரேரணை கொண்டுவரப்பட்டு, அது நிறைவேற்றப்பட்டாலும், நிறைவேற்றப்படாவிட்டாலும், தேசிய அரசாங்கத்தை நிறுவி, குறைந்த பட்ச வேலைத்திட்டத்துடன் செயற்படல் வேண்டும் என்ற யோசனைகளைத் தாம் முன்வைத்துள்ளதாக சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். (4)

# இலங்கைக்கு இந்தியா இதுவரை ரூ.22 ஆயிரம் கோடி உதவி

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு இந்தியா கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து பல்வேறு வகையில் உதவி வருகிறது.

அத்தியாவசியப் பொருட் கள், பெற்றோலிய பொருட்களை தொடர்ந்தும் வழங்கி வருகிறது. தமிழ் மற்றும் சிங்கள புத்தா ண்டின் போது 11 ஆயிரம் தொன் உணவுப் பொருள் வழங்கியது.


இதன்படி ஜனவரியில் இருந்து இதுவரை ரூ.7,500 கோடிக்கு அத்தியாவசியப் பொருள் உதவியும், ரூ.7,000 கோடிக்கு எரிபொருள் மற்றும் நாணய மாற்று உதவியும், ரூ.7,500 கோடிக்கு ஆசிய யூனியன் கூட்டமைப்பு சார் பில் இந்தியா உதவி வழங்கி இருப்பதாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (4)

# வரிகளை அதிகரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்

## முன்னாள் பிரதமர் ரணில்

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு சில சந்தர்ப்பங்களில் வரிகளை அதிகரிக்க வேண்டியிருக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்கக் கூடாது எனவும், அதனைப் பாதுகாப்பதில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4)

# போராட்டம் மேற்கொள்ளும் இளைஞர்கள் கடத்தப்படுகின்றனர்

(கொழும்பு)

பாராளுமன்றத்துக்கு முன்னால் போராட்டம் மேற்கொள்ளும் இளைஞர்கள் சிலர் பொலிஸாரால் கடத்திச்செல்லப்படுவதாக பாராளுமன்றின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.



பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இந்தத் தகவலை சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

அமைதியான போராட்டங்களை நடத்தும் இளைஞர்களை மோதலுக்கு இட்டுச் செல்வதைத் தடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (4)

# அமைச்சரவையில் இடம்பெற்ற தவறுகளை தட்டிக்கேட்காதது ஏன்?

## அலிசப்ரியிடம் சஜித் கேள்வி

(கொழும்பு)

இலங்கை தற்போது வெனிசூலா மற்றும் லெபானான் போன்ற திவாலான நாடாக மாறியுள்ளதாக எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நிதியமைச்சர் அலி சப்ரி உரையாற்றிய பின்னர் உரை நிகழ்த்திய சஜித் பிரேமதாச, நாட்டின் தலைவரால் எடுக்கப்பட்ட பைத்தியக்காரத் தீர்மானம் காரணமாக இன்றைய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.



பண்டோரா மற்றும் ஏனைய இடங்களில் வைப்புச் செய்யப்பட்டுள்ள டொலர்களை நாட்டுக்கு கொண்டு வந்தால் நாட்டில் மீண்டும் டொலர்கள் கிடைக்கும் என்று அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சர் என்ற வகையில் அரசாங்கத்தின் தவறுகளை ஏற்றுக்கொண்டமையை வரவேற்ற சஜித் பிரேமதாச, அமைச்சரவையில் இருந்துகொண்டு அமைச்சரவையில் இடம்பெற்ற தவறுகளை ஏன் தட்டிக்கேட்கவில்லை என்று சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பினார்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தை விமர்சிக்க வேண்டாம் என்று குறிப்பிட்ட அவர், இந்தத் திட்டங்களை நடப்பு அரசாங்கமே அரசியலுக்காக பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தினார்.

அரச சேவையாளர்களுக்கு வ்ழங்கப்பட்ட வேதன உயர்வு பிழையானது என்று நிதிய்மைச்சர் குறிப்பிட்டதை கண்டித்த அவர், அதன் காரணமாக நாட்டில் நிதிப் பிரச்சினை ஏற்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

இதேவேளை சர்வதேச உணவுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் நிறுவனங்களுடன் பேசி எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்கப்படும் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்கவேண்டும் என்றும் சஜித் பிரேமதாச கேட்டுக்கொண்டார். (4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: சூரி 10 செவ் 8 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BCA IT Engineer
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12582

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம் : பூரம் 1
கி.பா: 45 ½ சூரி 1 செவ் 3 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L அச்சகம்,பலசரக்குக் கடை
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் உள் நாடு மட்டும்
தொ.இ: B/12584

பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: பூரம் 4
கி.பா: 4 சூரி 11 செவ் 4 இல் உயரம்: 5'6"
தகைமை/தொழில்:Business Manage ment Business own shop
எதிர்பார்ப்பு: த்குந்த அரச, தனியார் உத்தி யோகம்
தொ.இ: B/12586

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சுவாதி 3
கி.பா: 19 ¾ சூரி 11 செவ் 8 இல் உயரம்:5'10"
தகைமை/தொழில்:Hotel Management கனடா PR உண்டு
எதிர்பார்ப்பு: காரைநகர் விரும்பத்தக்கது
தொ.இ: B/12587

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: பூசம் 1
கி.பா: 18 ¼ சூரி 2 செவ் 3 இல்
உயரம்: 155 cm
தகைமை/தொழில்:BSc (Hons) Temporary Demonstrator (Demo)
எதிர்பார்ப்பு:அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:/G12601

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 26 சூரி, செவ் 1 இல் உயரம்: 4'10"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: அரச, தனியார் உத்தியோகம் அல்லது நகைத்தொழில்
தொ.இ:G/12606

பிறப்பு: 1994 இந்து நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 42 சூரி, செவ் 12 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: சித்த மருத்துவம் (வைத்தியர்)
எதிர்பார்ப்பு:பட்டதாரி உள்நாடு மட்டும்
தொ.இ:G/12607

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி 3
கி.பா: சூரி.10 செவ் 1 இல்
உயரம் :156 cm
தகைமை/தொழில்:உயர்தரம் (தனியார் தொழில்)
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ:G/12611

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 37

# தன்மானம்



அலுவலகத்தில் வேலை பார்க்கும் மகள், நள்ளிரவு தூங்காமல் சோபாவில் அமர்ந்திருப்பதை கவனித்த அப்பா அருகில் வந்து, "ஏன் தூங்கவில்லை?" எனக் கேட்டார்.

"மனம் சரியில்லை" என்றாள் மகள்.

"உனக்கு அன்பான குடும்பம் இருக்கும் போது மனம் ஏன் சரியில்லை?" என்றார் அப்பா.

"இது அலுவலகத்தில் நடந்த விடயம்" என்றாள் மகள்.

"என்னவென்று சொல்... நானும் தெரிந்து கொள்கிறேன்" என்றார் அப்பா.

"என் அலுவலகத்தை கூட்டிப் பெருக்கி துடைத்து சுத்தம் செய்யும் பெண் ஒருத்திக்கு இப்போது தான் கல்யாணம் ஆகி குழந்தை பிறந்து ஒரு வருடம் ஆகி இருக்கிறது. அவ ளிடம் நட்புடனும் உரிமையுடனும் பழகு வேன்.

தன் குழந்தையின் முதலாவது பிறந்த நாளை விமர்சையாகக் கொண்டாட அவள் ஆசைப்பட்டாள். அதற்காக அலுவலகத்தில் ஒரு சில ஊழியர்களிடம் பண உதவி கேட் டாள். அவர்கள் மறுத்து விட்டார்கள். நான் அதைக் கேள்விப்பட்டு, அவள் கேட்காமலேயே முன்வந்து பணம் கொடுத்தேன். அதை வாங்கிக் கொண்டு எனக்குத் திரும்பத் திரும்ப நன்றி சொன்னாள்.

அதன் பிறகு பிறந்த நாள் நெருங்க நெருங்க அவள் நடவடிக்கையில் ஒரு மாற்றம் தெரிந்தது. என்னுடன் பேசுவதைக் குறைத்துக் கொண்டாள். பிறந்த நாளுக்குக்கூட என்னை பெயருக்கு அழைத்தாளே தவிர, மனமார அழைக்கவில்லை. ஆனால் அவளுக்கு பணம் கொடுக்க மறுத்தவர்களை எல்லாம் திரும்பத் திரும்ப அன்போடு அழைத்தாள். என்னை வேண்டுமென்றே ஒதுக்கியதை என்னால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

நான் அவளிடம், 'பிறந்த நாள் அன்று எனக்கு வேறு வேலை இருக்கிறது, வர முடியாது' என்று சொல்லிப் பார்த்தேன். அவள் உடனே, 'சரிங்க மேடம், உங்க இஷ்டம்' என்று சொல்லி விட்டாள். விழாவுக்கு வரச்சொல்லி என்னை வற்புறுத்துவாள் என்று எதிர்பார்த்தேன்.

"பிறந்த நாள் முடிந்து விட்டதா? நீ போகவில்லையா?" என்று கேட்டார் அப்பா.

"நேற்று அந்தக் குழந்தையின் பிறந்த நாளுக்காக பொம்மையெல்லாம் வாங்கி வைத்தேன். அவள் அழைக்காத அலட்சியமும், ஒரு குழந்தைக்கு பொம்மை வாங்கி வைத்து கொடுக்க முடியாத குற்ற உணர்ச்சியும் என்னை துன்புறுத்துகிறது அப்பா. என்னால் தூங்கவே முடியவில்லை" என்றாள் மகள்.

அப்பா உடனே, "நீ அவளுக்கு பண உதவி செய்த பிறகு அப்பெண்ணை பொதுவில் அனைவர் முன்னாலும் எதற்காகவாவது உரிமையுடன் கிண்டல் செய்தாயா?" என்று கேட்டார். "நினைவில்லை அப்பா."

"யோசித்துப் பார். நிச்சயம் அப்படி ஒன்று நடந்திருக்கும். அப்பா உனக்கு ஆரஞ்சு ஜூஸ் போட்டு எடுத்து வருகிறேன்."

அப்பா வந்ததும் மகள் ஆர்வத்துடன் சொன்னாள். "ஆமாம் அப்பா, நான் பண உதவி செய்து ஒரு வாரத்தில் அவள் ஒரு மஞ்சள் கலர் புடைவை அணிந்து வந்திருந்தாள். அது அவள் கணவன் அன்போடு எடுத்துக் கொடுத்ததாம். நான் அதைப் பார்த்த உடனே, 'என்னப்பா மஞ்சள் கலர் ஜிங்குச்சா. இதை எல்லாம் கட்டினா கூலிங்கிளாஸ் போட்டுத்தான் பாக்கணும் போல கண்ணு கூசுது' என்றேன். அதற்கு சுற்றி இருந்த அனைவரும் சிரித்தார்கள். ஆனால் அவளும் சிரித்தாளே!"

"நீ அவள் குழந்தையின் பிறந்த நாளுக்கு உதவி செய்து விட்டு அவளை அவமானப்படுத்தினால் பதிலுக்கு உன்னிடம் எப்படி அவள் கோபத்தை, இயலாமையை காட்ட முடியும். வேறு வழியில்லை, சிரித்துத்தானே ஆக வேண்டும். நான் சொல்வது மாதிரி செய்" என்று அப்பா ஒரு யோசனை சொன்னார்.

அதன்படி மறுநாள் காலை ஒரு மணி நேரம் முன்பாகவே மகள் கிளம்பி அந்தப் பெண் வீட்டுக்குச் சென்றாள். தொட்டிலில் கிடந்த மகனை தூக்கிக் கொஞ்சி, "பிறந்த நாளுக்கு வரமுடியலடா கண்ணா! இந்தா ஆன்டி உனக்கு பொம்மை வாங்கி இருக்கேன் பாரு" என்று பொம்மையை அருகில் வைத்தாள்.

அதன்பின் அந்தப் பெண்ணைப் பார்த்து, "நேத்து எங்க குடும்ப வாட்ஸ்அப் குரூப்ல என் சொந்தக்கார பையன் ஒருத்தன், என் பத்தாம் வகுப்பு மார்க் குறைவானது என்று பொதுவில் சொல்லி கிண்டல் செய்தான்.


அவன் அதை ஜாலிக்காக செய்தாலும் பொதுவில் அப்படி கிண்டல் செய்ததை என்னால் தாங்க முடியவில்லை. அப்போதுதான் நான் உன்னை "மஞ்சள் கலர் ஜிங்குச்சா' என்று கிண்டல் செய்த போது உன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை உணர முடிந்தது. என்னை மன்னித்துக் கொள்" என்றாள்.

வேலை செய்யும் பெண் கண்ணீர் மல்க இவள் கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

அங்கிருந்து ஸ்கூட்டி எடுத்து அலுவலகத்தை நோக்கி வரும் போது, 'ஒரு மனிதனுக்கு நீ கோடி ரூபாய் கொடுத்தால் கூட அவன் தன்மானத்தில் கைவைத்து விட்டால் அவன் உன்னை எதிர்க்கவே செய்வான்' என்று அப்பா சொன்ன வாசகம் நினைவுக்கு வந்தது.

புரிதலுடன் சிரித்துக் கொண்டாள்

## 14 ஆவது ஏவுகணையை சோதித்தது வடகொரியா



(பியாங்யாங்)

வட கொரியா அதன் கிழக்கு கடற்கரையை நோக்கி கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை ஏவி சோதனை செய்துள்ளது என தென் கொரியாவின் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்த ஏவுகணை 780 கி.மீ. உயரத்திலும் 470 கிலோ மீற்றர் தூரத்திலும் சென்றதாக சியோலின் கூட்டுத் தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

இந்த ஏவுகணை சோதனை இந்த ஆண்டு வட கொரியா நடத்திய 14 ஆவது ஆயுத சோதனை என அறிவிக்கப்பட்டுள்ளது.

வட கொரியா 2017 ஆம் ஆண்டிலிருந்து கடந்த மாதம் முதல் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணையை சோதித்துள்ளது. (4)

## உக்ரை... போ... அமெரி...

(மொஸ்கோ) —

எதிர்வரும் 9 ஆம்... அறிவிப்பார் என அ... ள்ளனர். ரஷ்ய ஜனா... மோதலை போர் அல்... சிறப்பு இராணுவ நட...

ஆனால், ரஷ்யாவின் இந்த வழக்கம் மாறக்கூடும் என அமெரிக்க மற்றும் மேற்கத்திய அதிகா...


## உக்ரைனில் விபத்து...

(கீவ்)

உக்ரைன் மேற்கு ரிவ்னே பிராந்தியத்தில் எரிபொருள் ஏற்றிச் சென்ற லொறி-பயணிகள் பேருந்து மற்றும் கார் என்பன மோதி இடம்பெற்ற கோர விபத்தில் 17 பேர் பலியாகினர்.

கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற இந்த விபத்தில் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம்...

## சனிக்கிரகத்திற்கு... 'பூமி 2.0' கண்டு...



சனிக்கிரகத்தின் அருகே இன்னொரு பூமியையும் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சனிக்கிரகமும் ஒரு சிறிய சூரிய குடும்பம் போன்றதுதான். சனிக்கிரகமானது 82 துணைக்கோள்களால் சூழப்பட்டுள்ளது. இந்த 82 துணைக்கோள்களில் டைட்டன் என்பது பூமியைப் போலவே தோற்றம் அளிக்கிறது. இந்த டைட்டனை இன்னொரு பூமியாகவே விஞ்ஞானிகளும், ஆராய்ச்சியாளர்களும் கருதுகிறார்கள்.

ஏனென்றால் இந்த டைட்டனில் ஆறு, குளங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். மேலும் மனிதர்கள் வாழ்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலையும் இந்த டைட்டனில் இருக்கிறது. பூமியில் இருக்கும் அனைத்து அம்சங்களும் இந்த டைட்டனில் இருப்பதால் இதை பூமி 2.0 என்றும் விஞ்ஞானிகள் அழைக்கிறார்கள்.

பருவ நிலைகளால் இயக்கப்படும் உலகளாவிய மணல் சுழற்சியின் காரணமாக உருவான இந்த டைட்டனின் மேற்பரப்பில் உள்ள ஏரிகள் பூமியில் இருப்பதை விட வெவ்வேறு பொருட்களால் நிரம்பியுள்ளன. திரவ மீத்தேன் நீரோடை டைட்டனின் பனிக்கட்டி மேற்பரப்பில் படிந்துள்ளன. நைதரசன் காற்று ஐதரோகார்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரைன் மீது அதிகாரபூர்வமான ...ரை மே 9 புடின் அறிவிப்பார்

## ...மரிக்கா புதுத் தகவல்

**...ஆம் திகதி அன்று உக்ரைன் மீது புடின் முறைப்படி போரை ...ன அமெரிக்கா மற்றும் மேற்கத்திய அதிகாரிகள் தெரிவித்து ... ஜனாதிபதி விளாடிமிர் புடின் இதுவரை உக்ரைனில் நடக்கும் ... அல்லது படையெடுப்பு என்று அழைக்க மறுத்துவிட்டார். மாறாக ...வ நடவடிக்கை என ரஷ்யா அழைத்து வருகிறது.**



...ரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

ரஷ்யாவில் 'வெற்றி தினம்' கொண்டாடப்படும் மே 9 ஆம் திகதி அன்று உக்ரைன் மீது புடின் அதிகாரபூர்வமாக போரை அறிவிப்பார் என மேற்கத்திய அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

1945 இல் நாசிக்களை நாடு தோற்கடித்ததை ஆண்டு தோறும் மே 9 ஆம் திகதி ரஷ்யா நினைவுகூர்ந்து வருகிறது.

எதிர்வரும் மே 9 ஆம் திகதி அன்று உக்ரைனில் இராணுவ சாதனை குறித்து அல்லது மோதலை தீவிரப்படுத்துவது குறித்து ரஷ்யா அறிவிக்கலாம் என்று மேற்கத்திய அதிகாரிகள் கருதுகின்றனர். (4)

## ...பத்து; 17 பேர் பலி


...என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த விபத்து உக்ரைனுக்கு எதிரான ரஷ்ய போருடன் நேரடி தொடர்புடையதாகத் தெரியவில்லை என்றும் ஜெலன்ஸ்கி கூறினார். (4)

## ரஷ்யா-உக்ரைன் யுத்தம் உடன் நிறுத்தப்பட வேண்டும்

### இந்திய பிரதமர் மோடி வலியுறுத்து




(ஹோபன்ஹெகன்)

உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என ஐரோப்பிய நாடுகளுக்கான உத்தியோகபூர்வ பயணத்தின் போது இந்திய பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார். ஜேர்மனி பயணத்தை முடித்துக் கொண்டு நேற்று முன்தினம் டென்மார்க் சென்ற பிரதமர் மோடி, அங்கு வைத்து இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். டென்மார்க் சென்றடைந்த பிரதமர் மோடியை அந்நாட்டுப் பிரதமர் மேட் பிரடெரிக்சன் விமான நிலையத்துக்கு வந்து வரவேற்றார். அதையடுத்து தலைவர்கள் இருவரும் பேச்சுவார்த்தை நடத்தினர். இந்தியாவுக்கும் டென்மார்க்குக்கும் இடையே பல்வேறு துறைகளில் நிலவும் நல்லுறவை வலுப்படுத்துவது தொடர்பாக அவர்கள் விவாதித்ததாக இந்தியப் பிரதமர் அலுவலகம் தெரிவித்தது.

இப்பேச்சு வார்த்தைக்குப் பின்னர் இந்திய-டென்மார்க் பிரதமர்கள் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். இதன்போது கருத்து வெளியிட்ட டென்மார்க் பிரதமர் பிரடெரிக்சன், உக்ரைன் மீதான போரை நிறுத்தி அப்பாவி மக்கள் கொல்லப்படுவதைத் தடுக்குமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை இந்தியா வலியுறுத்தும் என நம்புகிறேன் என்றார். தொடர்ந்து பேசிய இந்திய பிரதமர், உக்ரைன் போர் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்தினார். உக்ரைனில் நிலவும் மனிதாபிமான பிரச்சினை கவலையை ஏற்படுத்துகிறது. ஐ.நா. விதிகள், சர்வதேச விதிகள் உள்ளிட்டவற்றுக்கும் மற்ற நாடுகளின் இறையாண்மைக்கும் அனைத்து நாடுகளும் மதிப்பளிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (4)

## ...த அருகில் ...டுபிடிப்பு



...மணல் திட்டுகளை உருவாக்குகிறது. மேலும் டைட்டனின் பூமத்திய ரேகைக்கு அருகில் காற்று இருப்பது தெரிய வந்துள்ளது. டைட்டன் எனப்படும் மாற்று உலகத்தில் உள்ள விடயங்கள் அனைத்தும் வித்தியாசமானவையாக உள்ளன. ஆனால் அவை பூமியின் தன்மையுடன் காணப்படுகிறது என்பது கவரும் அம்சமாக உள்ளது எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (4)

## டென்மார்க் ராணியுடன் பிரதமர் மோடி சந்திப்பு



(ஹோபன்ஹெகன்)

ஜேர்மன் பயணத்தை முடித்துக் கொண்டு டென்மார்க் நாட்டிற்குச் சென்ற பிரதமர் மோடி, அந்நாட்டு பிரதமர் மெட்டே ப்ரெடரிக்சனுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதைத் தொடர்ந்து கோபன்ஹேகன் நகரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த டென்மார்க் வாழ் இந்தியர்களை சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பிரதமர் மோடி உரையாற்றினார். (4)

## 2 லட்சம் சிறுவர்கள் உட்பட உக்ரைனில் 10 லட்சம் பேரை சிறைப்பிடித்துள்ள ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரைன் நாடு நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அந்நாட்டின் மீது ரஷ்யா கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி போர் தொடுத்தது.

70 நாட்களுக்கும் மேலாக நடைபெற்று வரும் இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆயுதங்களை வழங்கி வருகின்றன. இதனால் ரஷ்யா-உக்ரைன் போர் எப்போது முடிவுக்கு வரும் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

உக்ரைனை முற்றுகையிட்டுள்ள ரஷ்யா பல்வேறு நகரங்களை கைப்பற்றும் முயற்சியில் முனைப்பாக இருக்கிறது. மேலும் நகரங்கள் மீது தாக்குதல் நடத்தும் ரஷ்யா அங்குள்ள பொதுமக்களை கைது செய்து வருகிறது.

இந்நிலையில் தற்போது வரை 2 லட்சம் சிறுவர்கள் உட்பட 10 லட்சம் உக்ரைன் நாட்டவர்களை சிறைப்பிடித்து வந்திருப்பதாக ரஷ்யாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் இறையாண்மைக்கு ஆதரவு அளியுங்கள்

## சிங்கள மக்களிடம் உறவுகள் கோரிக்கை

(நெளுக்குளம்)

**பொருளாதார நெருக்கடியை நிறுத்த "தமிழர் இறையாண்மைக்கு" சிங்களவர்கள் ஆதரவளிக்க வேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.**




காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர்ச்சியான போராட்டம் நேற்றுடன் 1900 ஆவது நாளை எட்டுகின்றது.

இதனையடுத்து நேற்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்கள், தமிழர்கள் காலங்காலமாக அவதிப்பட்டு வருகின்றனர். நமக்கு துன்பம் என்பது அன்றாட நிகழ்வு. அனைத்து சிங்கள-தமிழர் முரண்பாடுகளும் சிங்களவர்களையும் தமிழர்களையும் அழித்துவிடும். அதுதான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. எனவே, கொழும்பில் உள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள் "தமிழர் இறையாண்மைக்கு" அழைப்பு விடுக்க வேண்டும், அது சிங்கள மக்களை எந்த வித முரண்பாடுகளும் துன்பங்களும் இன்றி சுதந்திரமாக வாழ அனுமதிக்கும்.

தமிழர்களும் சிங்களவர்களும் பழங்காலத்தில் நட்புறவாக, மிக நெருங்கிய அண்டை நாடுகளாக இருந்தனர். நாம் இரண்டு இறையாண்மை கொண்ட அண்டை நாடுகளாக தொடரலாம். செக்கோஸ்லோவாக்கியாவின் மாதிரியைப் பின்பற்றுவோம், ஒருவருக்கொருவர் இறையாண்மை அந்தஸ்தை இணக்கமாக அனுமதிப்போம் என தெரிவித்தார். (4-6-299)

# இந்தியா செல்ல முயன்ற 14 பேர் கடற்படையினரால் கைது

(மன்னார்)

மன்னாரில் இருந்து சட்ட விரோதமாக இந்தியாவிற்கு படகில் சென்ற மூன்று குடும்பங்களைச் சேர்ந்த 12 பேர் உள்ளடங்கலாக 14 நபர்களை தாழ்வுப்பாடு கடற்பரப்பில் வைத்து நேற்று புதன்கிழமை அதிகாலை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

திருகோணமலையை சேர்ந்த 7 சிறுவர்கள், 3 பெண்கள், 2 ஆண்கள் உள்ளடங்கலாக 3 குடும்பங்கள் மற்றும் மன்னாரைச் சேர்ந்த படகோட்டிகள் இருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 14 பேரும் மன்னார் பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளின் பின் இரண்டு படகோட்டிகள் உள்ளடங்கலாக 14 பேரும் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-285)



முல்லைத்தீவு விசுவமடு மத்தியில் அமைந்துள்ள சனசமூக நிலைய வளாகத்தில் நீண்ட காலம் வசித்து வந்த வயோதிப தம்பதியினருக்கு வோல் தம் ஸ்ரோலண்டன் கற்பக விநாயகர் ஆலய ஸ்தாபகர் கோபால கிருஷ்ணனினால் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியில் அமைக்கப்பட்ட வீடு ஒன்று நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

(படம்: யதுபாஸ்கரன்)

# பற்றுச்சீட்டு இன்றி பணம் அறவீடு

## விவசாயிகள் குற்றச்சாட்டு

(கண்டாவளை)

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கோரக்கன்கட்டுப் பகுதியில் இவ்வாண்டுக்கான சிறு போக செய்கை தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை என்பதுடன் பற்றுச் சீட்டுக்கள் இன்றி எந்த ஒரு பணமும் அறவிட முடியாது என பரந்தன் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பரந்தன் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கோரக்கன்கட்டுப் பகுதி கமக்கார அமைப்பினால் எந்த வித பயிர்ச்செய்கைக் கூட்டங்களும் நடத்தப்படாது சிறு போக செய்கைக்கான வாய்க்கால் அமைப்பிற்கென ஒவ்வொரு விவசாயிகளிடமிருந்தும் தலா இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் வீதம் பற்றுச் சீட்டுக்கள் எதுவுமின்றி அறவிடப்பட்டுள்ளதாக குறித்த பிரதேச விவசாயிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பரந்தன் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு கேட்டபோது கோரக்கன்கட்டுப் பகுதியில் இவ்வாண்டுக்கான சிறு போக செய்கை தொடர்பான கலந்துரையாடல்கள் எதுவும் நடத்தப்படவில்லை. எந்தத் தீர்மானங்களுமின்றி பற்றுச் சீட்டுகள் இல்லாது விவசாயிகளிடமிருந்து பணம் அறவிடப்பட்டிருந்தால் அது ஒரு சட்டவிரோதமான செயற்பாடாகும். இது தொடர்பாக விவசாயிகள் முறைப்பாடு தெரிவிக்கும் பட்சத்தில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு தாங்கள் தயார் என்றும் தெரிவித்துள்ளார். (4-6-315)

# புற்றுநோயாளர்களுக்கான சத்துமா வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளை தொண்டு நிறுவனத்தால் புற்று நோய் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெறும் வசதி குறைந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட நோயாளருக்கான சத்துமா வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை கோண்டாவில் கிழக்கு சிவபூமி பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பெண் நோயாளர்களுக்கான நேரம் காலை 9 மணிமுதல் 11 மணிவரையும் , ஆண் நோயாள்ர்களுக்கு முற்பகல் 11 மணிமுதல் 1 மணிவரை சத்துமா வழங்கப்படும் என சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அறிவித்துள்ளார். (4)

# மஹோற்சவம்

(குப்பிழான்)

கோண்டாவில் மேற்கு சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்தும் 12 தினங்கள் இவ்வாலய மஹோற்சவம் காலை, மாலை உற்சவங்களாக இடம்பெறும்.

இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சப்பரத் திருவிழாவும், 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் 16 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (4-6-18)

# தமிழ் மொழியிலான உயர் நாடக டிப்ளோமா பாடநெறி ஆரம்பம்

(அராலி)

டவர் (tower) மண்டப அரங்கத்தினால், நாடக அரங்கியல் பாடசாலையானது நேற்று யாழில் உத்தியோகபூர்வ தமிழ் மொழியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது .

இம்மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டி.எஸ். திஸாநாயக்க, பிரதிப்பணிப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ் ஆகியோரது முயற்சியினால் யாழ்ப்பாணத்தில் டவர் மண்டப அரங்க மன்றத்தின் தமிழ் மொழியிலான உயர் நாடக டிப்ளோமா பாடநெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த பாடநெறிகளை கற்ற மாணவர்கள் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் கல்விமானி கற்கை முடித்து நாடகமும் அரங்கியலும் கல்விமானி பட்டத்துடன் ஆசிரியத்துவத்துக்கு உள்வாங்கப்படக் கூடிய வாய்ப்பு இந்தப் பாடநெறியில் உள்ளது.

இந்த உயர் டிப்ளோமா கற்கைநெறியானது இரண்டு வருடத்துக்குரியதாகும் . இதனைப் பூர்த்தி செய்தவர்கள் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் கல்விமானி கற்கை நெறியை தொடரலாம்.

இந்தக் கற்கை நெறியானது 1997ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. இருந்தாலும் 2007 ஆம் ஆண்டிற்குப் பின்னர் தான் திறந்தவெளி பல்கலைக்கழகத்தினுடன் இணைந்து இந்த பட்டத்தினை வழங்கும் செயற்பாட்டினை செய்தது.

இந்த ஆரம்ப நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட 52 மாணவர்களுக்கு கையேடு வழங்கப்பட்டது.

இம்மன்றத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டி.எஸ். திஸாநாயக்க, பிரதிப்பணிப்பாளர் கலாநிதி சண்முகசர்மா ஜெயபிரகாஷ், தகைசால் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாஸ், இலங்கை திறந்த பல்கலைக்கழக பிரதிப் பணிப்பாளர் திரு. கந்தவேல், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருமதி. ராஜமல்லிகை, கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (4-6-104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதிக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஆதரவில்லை

## வாசுதேவ திட்டவட்டம்



(கொழும்பு)

**ஜனாதிபதிக்கு எதிராக கொண்டு வரப்படும் எவ்வித யோசனைக்கும் தமது அணியினர் ஆதரவளிக்க மாட்டார்கள் என ஆளும் கட்சியில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

11 கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராக எதிர்க் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் எந்த அர்த்தமும் இல்லாத யோசனை எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். (4)

# அநுரவுக்கு எதிராக வழக்கு தொடரவுள்ள யோஷித



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் அவரது ஊழியர்கள் குழுவின் தலைமை அதிகாரியுமான யோஷித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் கொழும்பில் தன்னை குறித்து சுமத்திய குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதுடன் மக்களைத் தவறாக வழிநடத்தும்செயல் என யோஷித ராஜபக்ஷ வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதன்மூலம் தனக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயருக்காக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டத்தரணிகளுக்கு ஆலோசனை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (4)

# குற்றச்சாட்டை மறுக்கிறார் அஜித் நிவார்ட் கப்ரால்

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தாம் தொடர்பில் முன்வைத்த ஊழல் குற்றச்சாட்டை மறுப்பதாக முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

ஊழலுக்கு எதிரான குரல் எனும் செயற்திட்டத்திற்கு அமைவாக பல்வேறு விடயங்களை மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையில், 2014 ஆம் ஆண்டு அமெரிக்க அதிகாரி ஒருவருக்கு அனுமதியின்றி முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் நிதி வழங்கியதாக அநுரகுமார திஸாநாயக்க குறிப்பிட்டிருந்தார்.

6.5 மில்லியன் ரூபா இவ்வாறு குறித்த நபருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அவர் தற்போது விளக்கமறியலில் உள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளிக்கும் போதே, முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அதனை மறுத்துள்ளார்.

அத்துடன், தமக்கு எதிராக தவறாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் மத்தியவங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார். (4)

# குடிவரவு, குடியகழ்வு திணைக்கள சேவைகள் வழமைக்கு

(கொழும்பு)

பொது மக்களுக்கு குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களம் முக்கிய அறிவிப்பொன்றை வழங்கியுள்ளது.

அதாவது குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோளாறு திருத்தம் செய்யப்பட்டு சேவைகள் வழமை போன்று முன்னெடுக்கப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகழ்வு திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் தெரிவித்தார். (4)

# டொலரின் விற்பனை விலை ரூ.370

(கொழும்பு)

இலங்கையில் அனுமதி பெற்ற பல வர்த்தக வங்கிகளில் நேற்று புதன்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 370 ரூபாவாக பதிவாகியுள்ளது. (4)

# அதிபர் தண்டித்ததால் பாடசாலைக்கு தீ வைத்த மாணவர்கள்

(கொழும்பு)

பாணந்துறையில் பாடசாலை ஒன்றின் அதிபரின் அலுவலகம் மற்றும் கணனி ஆய்வு கூடத்திற்கு மாணவர்கள் இருவர் தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 12 மற்றும் 8 வயதுடைய இரண்டு சிறுவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர் ஒருவர் அணிந்து வந்த கையுறை தொடர்பில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அதிபர் தண்டனை வழங்கியுள்ளார்.

இதனால் கோபமடைந்த மாணவர் மற்றுமொரு மாணவனுடன் இணைந்து அதிபரின் நாற்காலிக்கு தீ வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்தில் கணினி ஆய்வகத்தில் இருந்த இருபதிற்கும் மேற்பட்ட கணினிகள், துணைக்கருவிகள், மின்விசிறிகள், ஏராளமான பாடப்புத்தகங்கள், அதிபரின் நாற்காலி மற்றும் பல கோப்பைகள் எரிந்து நாசமாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

## மருந்துகள் பெற்றுக் கொள்வதில் இடையூறாயின் முறையிடுக

(கொழும்பு)

பொதுமக்கள் மருந்துகளைப் பெற்றுக்கொள்ளும் போது ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்தால், அது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய சுகாதார அமைச்சின் 1999 என்ற இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்துமாறு சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (4)




| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 350 | 320 | 300 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 250 | 300 |
| தக்காளி | 400 | 320 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 140 | 80 |
| கோவா | 140 | 140 | 160 |
| கரட் | 160 | 200 | 250 |
| பூசணி | 80 | 60 | 100 |
| புடோல் | 200 | 140 | 160 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 320 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 480 | 450 | 400 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 200 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 200 |
| பயற்றங்காய் | 220 | 180 | 150 |
| லீக்ஸ் | 140 | 180 | 200 |
| பீற்றூட் | 140 | 200 | 240 |
| கறிமிளகாய் | 250 | 240 | 280 |
| முருங்கைக்காய் | 700 | 600 | 1000 |
| போஞ்சி | 420 | 200 | 480 |
| கத்தரிதம்புள்ள | 320 | 280 | 250 |
| கீரை - 1 பிடி | 130 | 70 | 120 |
| தேசிக்காய் | 350 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | -- | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 240 |
| பொன்னாங்காணி | 60 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 30 | 30 |
| ஈரப்பலா | -- | 120 | -- |

# அரசியல் நிகழ்ச்சிகளுக்கு தடை

## இலங்கை ஒலி-ஒளி பரப்பாளர் மன்றம் அதிரடி

(கொழும்பு)

அனைத்துத் தொலைக்காட்சி மற்றும் வானொலி நிலையங்களும், தங்கள் செய்தி ஒலி, ஒளி பரபரப்பை தவிர்த்து ஏனைய சமகால நிகழ்ச்சிகளில் அரசியல்வாதிகள் கலந்து கொள்வதனை நிறுத்தியுள்ளது.

அதற்குப் பதிலாக தொழில் வல்லுநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் நிபுணர்களுக்கு முன்னுரிமை அளிக்க முடிவு செய்துள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் தொடர்புடைய சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நிலையான அரசாங்கத்தை அமைப்பதற்கு அனைத்து அரசியல் கட்சிகளுக்கு அழுத்தம் செலுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ள்ளதாக இலங்கை ஒலி, ஒளி பரப்பாளர் மன்றம் தெரிவித்துள்ளது.

பொருளாதார, அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகள் குறித்து பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கும் நடவடிக்கைகளுக்கே அனைத்து நிகழ்ச்சிகளிலும் முன்னுரிமை வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

### சரியாகக் கேட்டான்!



தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மீண்டும் மரத்தின் மீது ஏறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் கீழே இறங்கி அதனைச் சுமந்து கொண்டு மயானத்தை நோக்கிச் செல்கையில் அதனுள்ளிருந்த வேதாளம் எள்ளி நகைத்து "மன்னனே! இந்தப் பயங்கர நடு நிசியில் நீ இப்படி விடாப்பிடியாக ஏன் முயல்கிறாய்? உன் தாய், தந்தையருக்கு ஏதாவது வாக்குக் கொடுத்து விட்டு உன் மனைவி, மக்களைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் அதை நிறைவேற்றப் போகிறாயா? இதனால் உன் மனைவி, மக்கள் தான் கஷ்டப்படுவார்கள். இதை விளக்க உனக்கு ஜெயபாலன் என்ற மன்னனின் கதையைக் கூறுகிறேன். கவனமாகக் கேள்" என்னு கூறி கதை சொல்ல ஆரம்பித்தது. வெகு காலத்திற்கு முன் ஜெயபுரத்தை ஜெயபாலன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவன் கிழவனாகி நாளுக்கு நாள் உடல் நலம் இழந்து போகவே இன்னும் சில நாட்களில் தான் இறந்து போவான் என்று அவனுக்குத் தெரிந்து போயிற்று. அதனால் அவன் தன் மகன் வீரசிம்மனை அழைத்து "மகனே! நான் இறந்து போய் விடுவேன்.

ஆனால் என் மனமோ மேலும் கொஞ்சக் காலம் வாழ்ந்து பூலோக சுகங்களை அனுபவிக்க விரும்புகிறது. நான் இறந்து விட்டால் என் உடலை எரித்து விடாதே. அதனை தைலம் பூசி பத்திரமாக ஒரு பெட்டிக்குள் வை. என்றாவது ஒரு மகான் வந்து அந்த உடலுக்கு உயிர் கொடுப்பார்.

அதன் பிறகு நான் சில ஆண்டுகள் சுகமாக வாழ்வேன். என் விருப்பத்தை நிறைவேற்று" என்றான். வீரசிம்மனும் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டான். இதற்கு ஒரு வாரத்திற்குப் பின் ஜெயபாலன் இறந்து போனதும் வீரசிம்மன் தன் தந்தையின் உடலை பாதுகாக்க அதன் உடலில் தைலம் தடவி அதனை சந்தன மரப் பெட்டியில் பத்திரமாக வைத்தான்.

வீரசிம்மன் மன்னன் ஆனதும் தீரபுர மன்னனின் மகள் திலோத்தமையை மணந்து கொண்டான். அவள் அழகி. நற்குணவதி. சில நாட்கள் ஆன பின் திலோத்தமை தாய்மை எய்தினாள். ஆஸ்தான சோதிடர் அவளின் ஜாதகத்தைப் பார்த்து விட்டு "ராணி ஒரு ஆண் குழந்தையைப் பெற்றெடுப்பாள். ஆனால் அவளுக்கு சர்ப்ப கண்டம் உள்ளது" என்றார்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## கிட்கிந்தா காண்டம்




அனுமன், தான் அந்தணன் அல்லன் என்றும், வானர இனத்தினன் என்றும் தெரிவித்துத் தன் சுய உருவை அவர்களுக்குக் காட்ட, வானும் மண்ணுமாய் நின்ற அவன் நெடிய வடிவத்தைக் கண்டு, வியந்தான் இராமன்; அவனை 'மாவீரன்' என்று கூறிப் பாராட்டினான்! அப்பொழுதே சுக்கிரீவனைத் தான் அழைத்து வருவதாய்க் கூறி விடை பெற்று நடை காட்டினான் அனுமன்.

**சுக்கிரீவனோடு நட்பு**

அனுமன் சுக்கிரீவனை அடைந்து இராம இலக்குவரைப் பற்றிய செய்திகளை எல்லாம் விரிவாய்க் கூறினான்; "இராமன் தன் மனைவி சீதையைப் பிடித்து துயருறுகிறான்; இராவணன் அவளைச் சிறைப் பிடித்து, மறைத்து வைத்து இருக்கிறான், சீதை சிறை வைக்கப்பட்டுள்ள இடம் தேட உன் இன்துணையை நாடி வந்துள்ளான்; உன் நட்பை விரும்புகிறான்; அவன் இங்கு வந்தது உனக்கும் நல்லது; துன்பம் விடிவு பெற அவன் உனக்கு உதவுவான்" என்று அனுமன் சுக்கிரீவனிடம் தெரிவித்தான். செய்தி கேட்டுத் தன் வாழ்வு உய்தி பெறும் என்ற நம்பிக்கையை அடைந்தான் சுக்கிரீவன். வானரத் தலைவனாகிய அவன் மானுடர் தலைவனாகிய இராமனை அடைந்து அடைக்கலம் பெற்றான். இருவரும் இன்னுரையாடி நல்லுறவு கொண்டு, நட்பு உடன்படிக்கையும் செய்து கொண்டனர். குகனோடு ஐவராய் விளங்கிய தசரதன் மக்கள், சுக்கிரீவனோடு அறுவராயினர். "கடந்தது போகட்டும்; இனி நாம் நடப்பதைக் கவனிப்போம்; சுக துக்கங்களில் இருவரும் பங்கு பெறுவோம்; உனக்கு வரும் கெடுதி எனக்கு உரியதாய் ஏற்பேன்; எனக்கு வரும் துன்பம் உனக்கு வந்தது ஆகும்; உன்னுடைய பகைவர் எனக்கும் பகைவர்; என் பகைவர் உன் பகைவர்; என் நண்பர் உனக்கு நண்பர்; உன்னுடைய நண்பர் எனக்கு நண்பர்" என்று இராமன் அறிவித்தான்.

இருவரும் உள்ளம் கலந்து, இனிய நண்பர் ஆயினர்; வானரர் ஆரவாரம் செய்து வாழ்த்துக் கூறினர். அனுமன் மகிழ்ச்சியின் எல்லையை அடைந்தான். சுக்கிரீவன் இராமன் இலக்குவரை விருந்துண்ண அழைத்தான்; காயும் கனியும் கிழங்கும் கொண்டு வந்து வைத்தான்; அவற்றை உண்டு அளவளாவினர். "நீயும் நின் மனையும் சுகமா?" என்று கேட்டான் இராமன். மூடியிருந்த கதவுகள் திறந்தன. அடக்கி வைத்த வேதனை வெளிப்பட்டது; கடந்த காலச் செய்திகளை நடந்தவாறு உரைத்தான். "வாலியும் யானும் உடன் பிறந்தவர்; அண்ணனிடம் அளவில்லாத பாசமும் மதிப்பும் காட்டினேன்; இராவணனும் அவன் வலிமைக்கு அஞ்சி அடங்கி இருந்தான்.

போரில் மாற்றான் வலிமையும் அவனை வந்துசேரும்; அத்தகைய வரவலிமையும் உரமும் பெற்றிருந் தான்; சிவபக்தனாய் இருந்தான்; சீலம் மிக்கவனாயும் விளங்கினான்.

"மாயாவி என்ற அசுரன், இவனிடம் வலியப் போருக்கு வந்தான்; வாலிக்கு அஞ்சிய அவன், ஓடி ஒரு பிலத்துள் நுழைந்து ஒளிந்தான்; அவனைத் தேடி வாலி பின்தொடர்ந்தான்; வாலி என்னைப் பார்த்து, "அவன் தப்பி ஓடிவிடக் கூடும்; உன்னை நம்பி நான் உள்ளே செல்கிறேன்; நீ அவனைத் தடுத்து நிறுத்தக் காவல் செய்; இது என் ஏவல்" என்று கூறி அப்பிலத்துள் நுழைந்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லியபடி செய்வது கடினமல்ல; மிக எளிது. ஆனால், அதற்கு முன் சொல்லும்பொழுது யோசித்துச் சொல்லப் பழகிக்கொள்.
– கி.ஆ.பெ.விசுவநாதம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## போராட்டமும் ஓயவில்லை ஆட்சியும் கலையவில்லை

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவையும் அவரது அரசாங்கத்தையும் வீட்டுக்கு அனுப்புவதற்காக நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் தொடர்ந்த வண்ணமுள்ளது.

அதிலும் குறிப்பாக காலிமுகத்திடலில் நடைபெறும் போராட்டம் 26 நாட்களைக் கடந்து விட்டன.

இதற்கும் மேலாக, அலரிமாளிகையை நோக்கியும் ஜனாதிபதி மாளிகையைச் சுற்றியும் மக்கள் போராட்டம் நடந்த வண்ணமுள்ளது.

இதில் பௌத்த பிக்குகளின் ஆக்ரோசமான போராட்டத்தால், தென்பகுதி அதிர்ந்து போயுள்ளதெனலாம்.

எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ பதவி விலகுவதாகவோ அன்றி பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ தனது பதவியை இராஜினாமாச் செய்வதாகவோ இல்லை.

மாறாக, நேற்றைய தினம் (04) கருத்துரைத்த பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷ; எந்த அழுத்தங்களுக்கும் அடிபணிந்து எனது பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்ய மாட்டேன் என ஆணித்தரமாகக் கூறியுள்ளார்.

ஆக, மக்கள் போராட்டம் வெடித்துள்ள போதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவோ அல்லது பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவோ தமது பதவிகளில் இருந்து விலகப்போவதில்லை என்பது உறுதியாகிறது.

அதாவது போராட்டம் ஒருபுறம் நடந்து கொண்டிருக்க, ஆட்சித் தரப்பும் தன்னைத் தக்க வைக்கும் பொருட்டு காய்நகர்த்தலைக் கனகச்சிதமாகச் செய்து வருகிறது.

நிலைமை இப்படியே நீண்டு செல்லுமாயின், ஒரு கட்டத்தில் போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் மனச் சோர்வடைந்து போராட்டக் களத்தில் இருந்து வெளியேறுவர். அல்லது போராட்டத்தை முன்னெடுப்பவர்கள் மத்தியில் உள்ளக முரண்பாடுகள் ஏற்பட்டு அரசுக்கெதிரான போராட்டம் ஸ்தம்பிதமடையலாம்.

இதைவிட வேறு எதுவும் அரசியல் களத்தில் நடக்கும்போல தெரியவில்லை.

உண்மையில் மக்களின் போராட்டத்துக்கு மதிப்பளித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ ஆட்சியில் இருந்து விலகியிருக்க வேண்டும்.

அதை அவர் செய்யாதபோது, பிரதமர் மகிந்த ராஜபக்‌ஷவேனும் தனது பிரதமர் பதவியைத் தூக்கி எறிந்திருக்கலாம். ஆனால் அவரும் அதைச் செய்யவில்லை.

போராட்டம் நடத்தியும் ஆட்சித் தரப்பில் இருக்கக்கூடியவர்கள் அசையவில்லையெனில், போராட்டம் நடத்துபவர்கள் தமது போராட்டத்தை வலிமை கொண்டதாக மாற்றியிருக்க வேண்டும். இருந்தும் அவர்களும் அதனைச் செய்யவில்லை.

இதனைப் பார்க்கும்போது எல்லாமும் செப்படி வித்தை என்று நினைக்குமளவுக்கு நிலைமை உள்ளது.

எதுஎவ்வாறாயினும் சமகால அரசியல் களநிலை தொடர்பில், தமிழ் மக்களாகிய நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பது தான் இங்கு கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

# நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் தயார்

## தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு முகங்கொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக ஆளுங்கட்சியின் பிரதம அமைப்பாளர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசியலமைப்பு மற்றும் பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக 3 மொழிகளிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தாக்கல் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதை சபாநாயகர் ஏற்றுக்கொண்டால், ஐந்து வேலை நாட்கள் முடியும் வரை விவாதம் நடத்தக் கூடாது எனவும் அதற்குள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அதைப் படிக்க வாய்ப்பு அளிக்க வேண்டுமெனவும் தினேஷ் குணவர்தன குறிப்பிட்டார். (ம-7)

## நாட்டில் புதியதோர் ஆரம்பம் வேண்டும்

### கர்தினால் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

நாட்டில் புதியதோர் ஆரம்பம் வேண்டும் என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

எமது நாட்டின் சட்டம் ஜனாதிபதியும் பிரதமரும் கையாடல் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளமை துரதிஷ்டவசமானது என தெரிவித்துள்ள பேராயர் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, சட்டமானது அவர்களுக்கு மேலே காணப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

புனித பாப்பரசரின் விசேட அழைப்பின் பேரில் வத்திக்கானுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த அவர், தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்தபோதே விமான நிலையத்தில் வைத்து மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

உடனடியாக புதிய ஆரம்பம் ஒன்றுக்கு இடமளிக்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொறுப்புள்ள தலைவர்கள் நாட்டுக்காக சிந்தித்து செயற்பட பழகிக் கொள்ள வேண்டும் என தெரிவித்த அவர், அதற்காக நடிப்பதில் அர்த்தம் இல்லை. சரியான முறையில் பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்றார். (ம-7)

## இன்றும் மின்வெட்டு அமுலாகும்

(கொழும்பு)

நாட்டில் இன்று 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, A,B, C,D,E,F,G,H,I,J,K,L,P, Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையிலான காலப்பகுதியில் 2 மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையிலான காலப்பகுதியில் 1 மணித்தியாலமும் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை சில பகுதிகளுக்கு காலை 6 மணி முதல் மாலை 9 மணி வரையிலான காலப்பகுதியில் 3 மணித்தியால மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

### அரசுக்கு எதிரான போராட்டம்

## வவுனியாவில் நாளை பூரண கடையடைப்பு


(வவுனியா)

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை மற்றும் அரசுக்கு எதிராக நாளை 6 ஆம் திகதி வவுனியாவில் பூரண கடையடைப்பை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நேற்று இணைந்த தொழிற்சங்கத்தின் ஏற்பாட்டில் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் கூடி எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் 6 ஆம் திகதி அனைத்து கடைகள் மூடப்பட்டும் பேருந்துகள் சேவையில் ஈடுபடாது இருக்கவும் முச்சக்கர வண்டிகள் சேவையில் ஈடுபடாமலும் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் அரச திணைக்களங்கள், வங்கிகள், பல்கலைக்கழகம், ஆசிரியர் சங்கங்கள் தமது கடமையில் இருந்து விலகியிருக்கவும் தீர்மானித்துள்ளன.

இதேவேளை 6 ஆம் திகதி அரசாங்கத்துக்கு எதிராக பாரிய ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சத்திய தரிசனம்



## சத்தியம்

- மேலும் 30.01.2014 திகதி அதிகாலை நான் தியானத்தில் ஆழ்ந்திருந்த போது எனது உடம்பில் இருந்து நான் உடம்பு அல்ல என உணர்வு வந்ததும் நமது சுவாமியர்கள் எனக்கு பின்புறத்தில் இருந்து சிமேந்து தரையில் 8 -10 தடவைகள் தனது கையால் அதிக சத்தத்துடன் அடித்தார். தியானத்தில் எனது சிந்தனையில் சுவாமி நான் உனக்கு பின்னால் இருக்கிறேன் என்று உண்மையை நிரூபித்துச் சென்று விட்டார். இச்சம்பவங்கள், அற்புதங்கள் அனைத்தும் சுவாமி பகவானின் இடத்தில் இடம்பெற்றது என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுகிறேன். அதாவது நான் பகவானின் மண்டபத்தில் தினமும் உறங்கிக் கொண்டு வருகிறேன்.
- 2014 .01 மாத காலப்பகுதியில் நான் தியானம் செய்து கொண்டிருந்த போது நமது சுவாமி அவர்கள் எனக்கு ஒரு பெயர் வைத்துள்ளார். அதாவது நமது சுவாமி உனது பெய்ர் சத்தியம் என்று கூறினார். இதற்காகவே இந்த அனுபவ உரைக்கு சுவாமி எனக்குச் சூட்டிய பெயரான சத்தியத்தை தலைப்பாக வைத்துள்ளேன் என்பதைக் குறிப்பிடுகிறேன். மற்றும் மேலும் 2014 பெப்ரவரி மாத காலப்பகுதியில் சுவாமியின் நிறுவனத்தில் நான் வகித்துள்ள பதவியொன்றையும் எனக்கு குறிப்பிட்டுச் சொன்னான். இந்த பதவி என்ன என்பது இவ்விடத்தில் நான் குறிப்பிடவிரும்பவில்லை.
- மேலும் சுவாமி தனது அருளமுத உரையில் குறிப்பிட்டுள்ளார். தெய்வித் தியானம் எனும் தூய ஏரியில் மட்டும் நீந்தி விளையாடு. புலன் இன்பம் எனும் அழுக்குக் குட்டையில் விளையாட ஏன சபலம் கொள்கிறாய் என்று [illegible] நரிகளே எனது அனுபவத்தை நீங்களும் அனுபவியுங்கள். சுவாமி [illegible] அல்லது வாழ்க்கையில் கடைப்பிடியுங்கள். சுவாமி நிறைய அனுபவங்கள் உங்கள் நினைவைத் தொட்டுச் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலப்பு தேர்தல் முறையில் மாகாண சபைத் தேர்தலுக்கான எல்லை நிர்ணய அறிக்கை-ஒரு பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 58

**வடமத்திய மாகாணம் வடக்கே வட மாகாணத்தையும், தெற்கே மத்திய, கிழக்கு ஆகிய மாகாணங்களையும், கிழக்கே, கிழக்கு மாகாணத்தையும், மேற்கே, வடமேல், வடக்கு ஆகிய மாகாணங்களையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. மாகாணத்தின் மொத்தப் பரப்பில் 3,932 சதுர கிலோமீற்றர் அதாவது 37.5% வரையான பகுதி 2010 ஆம் வருடமளவில் வனப்பகுதியாகக் காணப்பட்டது.**

மாகாணம் 2015 ஆம் ஆண்டு இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் 5% பங்களிப்பைச் செலுத்தியது. அத்தோடு சேவைத் துறையில் 5% கைத்தொழிற் துறையில் 4% விவசாயத் துறையில் 9% பங்களிப்புச் செலுத்தியுள்ளது. வடமத்திய மாகாணத்தின் பொருளாதார வருமானம் முக்கியமாக சேவைத் துறையில் இருந்தும் (61%) அதைத்தொடர்ந்து கைத்தொழிற் துறையில் இருந்தும் (24%) மிகுதி விவசாயத் துறையில் இருந்தும் (15%) கிடைக்கப் பெறுகின்றன. 2016 ஆம் ஆண்டில் வடமத்திய மாகாணத்தின் வேலை வாய்ப்பு முக்கியமாக விவசாயத் துறையில் (46%) அதைத்தொடர்ந்து சேவைத் துறையில் (35%) மற்றும் கைத்தொழிற் துறையில் (19%) ஆகும்.

சனத்தொகை மற்றும் வீடுகள் கணக்கெடுப்பின் (2012) பிரகாரம் சனத்தொகையின் விஞ்ஞான ரீதியான பிரிவுகளான நிர்வாகம், உள்ளூராட்சி மற்றும் தேர்தல் அதிகாரப் பிரதேசங்கள் தொடர்பாக மாகாணத்திற்கும் அதன் மாவட்டங்களுக்கும் ஏற்புடைய தகவல்கள் அடுத்துவரும் பகுதிகளில் விபரிக்கப்பட்டுள்ளன.

### வட மத்திய மாகாணம் மொத்த சனத்தொகை, சனத்தொகை அடர்த்தி மற்றும் எழுத்தறிவு -2012

சனத்தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்புக்கு (2012) அமைய நாட்டின் மொத்த சனத்தொகையில் 6.2 வீதத்திற்குச் சமமான சனத்தொகையை அதாவது 1,266,663 மக்கள் தொகையை இம்மாகாணம் உள்ளடக்கியிருந்தது. அத்தொகையில் 67.9 வீதமான 860,575 சனத்தொகை அநுராதபுரத்திலும் மற்றும் 32.1 வீதமான 406,088 சனத்தொகை பொலன்னறுவை மாவட்டத்திலும் காணப்பட்டது. இம்மாகாணம் ஒரு சதுர கிலோ மீற்றருக்கு 130 நபர்கள் சனத்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது. இம்மாகாணத்தில் 10 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையின் எழுத்தறிவு மட்டம் 95.4% வீதமாகும்.

### வட மத்திய மாகாணம் பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாறுபட்டுள்ள விதம் - 2012

மாகாணத்தில், மாவட்டத்தில் மற்றும் நாட்டில் பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாறுபட்டிருப்பது தொடர்பாக அட்டவணை 9.1 இல் காட்டப்பட்டுள்ளது. நாட்டின் ஏனைய மாவட்டங்களைப் போன்று இவ்விரு மாவட்டங்களிலும் பெண்கள் சனத்தொகை ஆண்கள் சனத்தொகையை மிஞ்சியிருப்பதை அட்டவணை 3.1 மூலம் அவதானிக்க முடியும்.

அட்டவணை 3.1: பால்நிலைக்கு அமைய சனத்தொகை மாற்றம் - வடமத்திய மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத் தொகை | ஆண்கள் | | பெண்கள் | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| அநுராதபுரம் | 860,575 | 420,100 | 49.0 | 440,475 | 51.0 |
| பொலன்னறுவை | 406,088 | 200,780 | 49.4 | 205,308 | 50.6 |
| வடமத்திய மாகாணம் | 1,266,663 | 620,880 | 49.0 | 645,783 | 51.0 |
| இலங்கை | 20,359,439 | 9,856,634 | 48.4 | 10,502,805 | 51.6 |

### வட மத்திய மாகாணம் சனத்தொகைபிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் -2012

சனத்தொகைபிரிவுகள் அடிப்படையில் வேறுபட்டுள்ள விதம் அட்டவணை 3.2 இல் தரப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண சனத்தொகையில் பெரும்பான்மை மக்கள் கிராமப்புறத்தில் வாழ்கின்றனர். இலங்கையின் நகர்ப்புறத்தில் வாழும் மொத்த சனத்தொகையில் 1.4வீதத்தினர் மட்டுமே வடமத்திய மாகாணத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

அட்டவணை 3.2: பிரிவுகளுக்கு அமைய சனத்தொகை வேறுபாடு – வடமத்திய மாகாணம்

| பிரதேசம் | மொத்த சனத் தொகை | நகர | | கிராமிய | | தோட்ட | |
|---|---|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % | எண்ணிக்கை | % |
| அநுராதபுரம் | 860,575 | 50,595 | 5.9 | 809,980 | 94.1 | - | - |
| பொலன்னறுவை* | 406,086 | - | - | 406,072 | 100 | 16 | - |
| வடமத்திய மாகாணம் | 1,266,663 | 50,595 | 4.0 | 1,216,052 | 96.0 | 16 | - |
| இலங்கை | 20,359,439 | 3,704,470 | 18.2 | 15,753,322 | 77.4 | 901,647 | 4.4 |

- தற்போது பொலன்னறுவை நகரம் மாநகர சபையாக உயர்வு பெற்றுள்ளது.

### வட மத்திய மாகாணம் இனங்கள் அடிப்படையில் சனத்தொகை சதவீத மாற்றம் -2012

மாகாணத்தின் சனத்தொகை இன ரீதியில் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு ஏற்ற விதத்தில் அட்டவணை 3.3 குறிப்பிடப்பட்டுள்ளது.வடமத்திய மாகாண சனத்தொகையின் பெரும்பான்மையினராக சிங்களவர்கள் (90.9%) வசிக்கின்றனர். இரண்டாவதாக இலங்கைமுஸ்லிம்கள்8.0% அதற்கு அடுத்ததாக தமிழர்கள் (1.0%) மற்றைய இனத்தவர்களான பேர்கர், மலே, இலங்கைச் செட்டி மற்றும் பாரத மக்கள் 0.2% மட்டும் வசிக்கின்றனர். இலங்கையில் உள்ள சிங்களவர்கள் சனத்தொகையில் 7.5% வடமத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர்.இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் சனத்தொகையில் 5.3% வடமத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர்.

### வட மத்திய மாகாணம் சமயஅடிப்படையில் சனத்தொகைவேறுபாடு-2012

சமய அடிப்படையில் சனத்தொகை வேறுபாடு அட்டவணை 3.4 இல் காட்டப்பட்டுள்ளது. வட மத்திய மாகாணத்தின் சனத்தொகையில் கூடிய எண்ணிக்கையானோர் பௌத்தர்களாகும்.

அதாவது 90% ஆகும். அதற்கு அடுத்ததாக இஸ்லாமியர்கள் (8%). இந்துக்கள், உரோமன் கத்தோலிக்கர்கள் மற்றுப ஏனைய சமயத்தினர் 2% ஆகும்.

இலங்கையின் பௌத்தர்களின் சனத்தெகையில் 8% வடமத்திய மாகாணத்தில் வசிக்கின்றனர். இஸ்லாமியர்கள் 5.3% மற்றும் இந்துக்கள், உரோமன் கத்தோலிக்கர்கள் உட்பட ஏனைய சமயத்தினர் 0.6% ஆகும்.

அட்டவணை 3.3: இன அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் – வடமத்திய மாகாணம்

அட்டவணை 3.3: இன அடிப்படையில் சனத்தொகை வீத பரம்பல் – வடமத்திய மாகாணம்

| பிரதேசம் | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | வேறு |
|---|---|---|---|---|---|
| அநுராதபுரம் | 91.0 | 0.5 | 0.1 | 8.2 | 0.2 |
| பொலன்னறுவை | 90.7 | 1.8 | 0.0 | 7.4 | 0.1 |
| வடமத்திய மாகாணம் | 90.9 | 0.9 | 0.1 | 8.0 | 0.1 |
| இலங்கை | 74.9 | 11.1 | 4.1 | 9.3 | 0.5 |

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிணற்றில்...

சம்பவம் இடம் பெற்றது.

இரட்டை குழந்தைகளில் ஒரு குழந்தையான கிருஷ்ணகாந்தன் சித்தாத் (வயது-3) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தார்.

இரட்டையர்கள் ஊஞ்சலில் விளையாடிக் கொண்டிருந்துள்ளனர். அவர்களுக்கு பிஸ்கட் கொடுத்துவிட்டு தாயார் தேநீர் தயாரிக்க சமையலறைக்குச் சென்றுள்ளார்.

மீள வந்து பார்த்த போது பாலகன் ஒருவரைக் காணவில்லை. வீட்டு வளவில் தேடிய பின் கிணற்றை பார்த்த போது பாலகன் கிணற்றில் தவறி வீழ்ந்தமை கண்டறியப்பட்டது.

குழந்தையை உடனடியாக மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற பேர்தும் பாலகன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

கட்டுக் கிணற்றை சுற்றி தகரத்தினால் வேலியிடப்பட்டுள்ளது. அதில் ஏறிய போதே பாலகன் கிணற்றுக்குள் தவறி வீழ்ந்திருக்கலாம் என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மரண விசாரணையை மேற்கொண்டார். (ம-7,33,104)

## அமெரிக்க...

குறிப்பிட்டார்.

கைதுக்கு அஞ்சாமல் போராட்டம் நடத்தும் சுதந்திரம் ஜனநாயகத்தின் முக்கிய அம்சம் எனவும் அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வன்முறையை புறக்கணிக்குமாறு அனைத்து தரப்பினருக்கும் அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளதுடன், அமைதியான போராட்டக்காரர்களுக்கு ஆதரவளிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## பதவியிலிருந்து...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றில் பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்தும் தரப்பினரிடம் ஆட்சியதிகாரத்தை ஒப்படைக்கத்தயார். அதனை விடுத்து அழுத்தங்களுக்கு அடிபணிந்து பதவி விலகப் போவதில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கட்சி தலைவர் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் நாட்டின் பொருளாதார மற்றும் சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் முன்னெடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு விளக்கமளிக்கப்படும் எனவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)

## நாடு இருளை...

கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

நேற்று பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஜனாதிபதிக்கு எதிரானதும் மற்றும் பிரதமர் தலைமையிலான அரசுக்கு எதிரானதுமான நம்பிக்கையில்லாப் பிரேரணைகள் உடனடியாக வாக்கெடுப்புக்கு வரவேண்டும்.

நியாயமான வரிக் கொள்கை பற்றி எனக் கூறும்போது கைதட்டுபவர்கள், இந்த அரசு ஆட்சிக்கு வந்தவுடன் கொண்டு வந்த கோடீஸ்வரர்களுக்கு வரிச்சலுகை வழங்கும்போதும் கைதட்டுவர்ர்கள்.

கோடிக்கணக்கான டொலரை நாட்டுக்கு இழக்கச் செய்த பண்டோரா திருடர்களிடமிருந்து உடனடியாகப் பணத்தை மீட்குமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்.

நலன்புரித் திட்டங்களை அரசு கொள்ளையடிக்கக்கூடாது. சர்வதேச நன்கொடை மாநாடொன்றை விரைவில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரசின் 30 மாத கால தாமதச் செயற்பாடுகளாலேயே நாடு இன்று வீழ்ச்சியடைந்துள்ளது. இன்றாவது உலக நாடுகளுடன் கொடுக்கல் - வாங்கல்களை முன்னெடுக்குமாறு அரசைக் கோருகின்றோம்.

பிரச்சினை நீடித்தால் லெபனானுக்கு ஏற்பட்ட நிலைமையே இலங்கைக்கு ஏற்படும் என நிதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். 'ஏற்படும்' என்பது அல்ல, அந்நிலைமை ஏற்பட்டுவிட்டது. அதற்கு அரசுதான் பொறுப்புக்கூற வேண்டும். தலைக்கு மேல் வெள்ளம் வந்த பிறகு, அணை கட்டுவது குறித்து சிந்திப்பதில் பயன் இல்லை.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும், பிரதமர் வீடு செல்ல வேண்டும். மக்களின் கோரிக்கை இதுவே. அதற்காகவே நாம் நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை முன்வைத்துள்ளோம்" என்றார். (ம-7)

## 20 ஆவது...

வித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் இந்த அரசை அகற்றுவோம். அதன்பின்னர் மொட்டு கட்சி உறுப்பினர்கள் இணைந்து புதிய பிரதமரை தெரிவு செய்து ஆட்சி அமைத்துக்கொள்ளுங்கள்.

அவ்வாறு அமையும் அரசின் முதலாவது பணி, 20ஐ இல்லாதொழிப்பதாக இருக்க வேண்டும். அதன்பின்னர் இடைக்கால அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்து நாம் பரிசீலிக்கலாம்" என்றார். (ம-7)

## பாராளு...

வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளது.

பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தனது பதவியை இராஜினாமா செய்துகொண்டார். அதனை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச ஏற்றுக்கொண்டுள்ளார் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

இந்நிலையிலேயே பிரதி சபாநாயகர் தெரிவுக்கான வாக்களிப்பு இன்று நடைபெறவுள்ளது என்றும் சபாநா்யகர் தெரிவித்தார். (ம-7)

## வரலாற்று...

பாராளுமன்றில் நேற்று விசேட உரையாற்றிய போது அமைச்சர் இதனை தெரிவித்தார்.

நாட்டின் பிரச்சினையை ஒரு மாதத்தில் தீர்க்க முடியும் என கூறினால் நான் பைத்தியக்காரன் என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தீர்க்க சுமார் 2 வருடங்களுக்கும் அதிகமாக செல்லும்.

2 வருடங்களில் இந்த பிரச்சினையை தீர்ப்பதா அல்லது 5 முதல் 10 வருடங்கள் வரை இதனை நீடிப்பதா என்பது தொடர்பில் நம் அனைவரினதும் கையில்தான் உள்ளது என அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையின் தற்போதைய வெளிநாட்டு பணப்புழக்கம் 50 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கூட இல்லை என நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேபோல், வரி அதிகரிக்க வேண்டிய காலத்தில் நாம் அதனை குறைத்து பிழை செய்துள்ளதாக அமைச்சர் பாராளுமன்றில் நேற்று தெரிவித்தார்.

அதன்படி, அரசாங்கத்தின் வரி வருமானம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.7 சத்வீதமாக குறைந்துள்ளதாக நிதி அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## நாடு...

நாடு தழுவிய முழுமையான ஹர்த்தாலுக்கு தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.

நாளை 6ஆம் திகதி நாடு தழுவிய ஹர்த்தால் முன்னெடுக்கப்படும் என தொழிற்சங்க ஒருங்கிணைப்பு நிலையம் தெரிவித்துள்ளது.

அரசு, தனியார் மற்றும் தோட்டத் துறைசார்

சேர்ந்த அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவார்கள் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, நாளைய தினம் நாடு முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் உள்ள மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்துவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மீண்டும்...

வான் உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில், ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதிக்கு பின்புறத்தில் மீண்டும் கூடாரங்களை அமைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நடைபாதை மற்றும் பொதுமக்களுக்கு இடையூறாக அலரிமாளிகைக்கு முன்பாக உள்ள வாகனங்கள் மற்றும் அனைத்து உடைமைகளையும் அகற்றுமாறு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனை தொடர்ந்து நீதிமன்ற உத்தரவுக்கமைய, அலரிமாளிகை முன்பாக உள்ள நடைபாதையில் நிறுத்தப்பட்டிருந்த பேருந்துகள் மற்றும் பாரஊர்திகள் அகற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த பகுதியிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட போராட்டக்காரர்கள் அடுத்த வீதியில் மீண்டும் கூடாரங்களை அமைத்து தமது போராட்டத்தை மீண்டும் தொடர்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, அலரி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் சார்பில் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமைகள் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 04/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1242
மகரம் 9 7 8 4 9 3

மெகா பவர்
திகதி 04/05/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1100
B 12 20 24 28 43

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.05.04
சீட்டிழுப்பு இலக்கம் 061
துலாம் 01 04 09 19 துலாம்

மஹஜன சம்பத
திகதி 2022/05/04
சீட்டிழுப்பு இலக்கம் 4752
J 0 5 4 3 8 0

தன நிதானய
திகதி -2022.05.04
சீட்டிழுப்பு இலக்கம் - 782
F 23 41 59 78

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.04
சீட்டிழுப்பு இல: 1555
வர்ணம்: இளஞ்சிவப்பு
ரூ.67,147,308/-
09 19 31 56 G

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.05.04
சீட்டிழுப்பு இல: 3890
ரூ.5,102,400/-
வெற்றி இலக்கங்கள் 36 37 46 56 P

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1729
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022 / 05 / 04
தினம் புதன்
M 04 05 14 63
அடுத்த சுப்பர் ஜக்பொட் : ரூ. 59,769,286/-

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,421,574/-
திகதி 2022 / 05 / 04
வெற்றி வாரம் 3441
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 34 40 46 56 மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,164,440/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 21 06 21 28 76
சீட்டிழுப்பு வாரம் 905
பச்சை
2022.05.04 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 235,158,541/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசியப் பொருட்கள் முற்றாக இல்லாது போகும்

## சபையில் அலி சப்ரி எச்சரிக்கை



(கொழும்பு)

நாட்டு மக்களோ அல்லது தற்போது பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களோ நாடு எதிர் நோக்கும் பொருளாதார நெருக்கடியின் அளவை இன்னும் முழுமையாக புரிந்துகொள்ளவில்லை என நிதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தற்போது பற்றாக்குறையாக காணப்படும் அத்தியாவசியப் பொருட்கள் எதிர் காலத்தில் நாட்டில் முற்றாக இழக்கப்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

பாராளுமன்ற அமர்வில் நேற்று விசேட உரையொன்றை ஆற்றியபோதே நிதி அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் பாராளுமன்றத்திலும் ஒட்டுமொத்த சமூகத்திலும் பல விவாதங்களும் விமர்சனங்களும் இடம்பெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

தற்போது பற்றாக்குறையாக காணப்படும் இந்த அத்தியாவசியப் பொருட்கள் எதிர்வரும் காலங்களில் நாட்டில் முற்றாக இழக்கப்படும் என அவர் எச்சரித்துள்ளார்.

தற்போது இலங்கை எதிர் கொள்ளும் ஒட்டுமொத்த பொருளாதார நெருக்கடி மிகவும் பாரதூரமானதும் ஆழமானதுமானதென்றும் வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திரத்திற்குப் பின்னரான மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை எதிர் கொண்டுள்ளதாக நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இந்த அச்சுறுத்தலில் இருந்து விடுபட அனைவருக்கும் தேசிய பொறுப்பு உள்ளது எனத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள வரிக் கொள்கையை முன்னெடுத்துச் செல்ல முடியுமா? என்பது கேள்விக்குறி எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

பாராளுமன்றத்துக்கு அருகில்

# ஆர்ப்பாட்டங்களுக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்கு அருகில் இந்த வாரம் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களை தடுக்க உத்தரவிடுமாறு பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கடுவெல நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இன்று மற்றும் நாளை பாராளுமன்றத்திற்கு அருகாமையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டங்களைத் தடுக்குமாறு பொலிஸாரினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தலங்கம பொலிஸாரினால் இந்த தடைப்பு உத்தரவுக்கான கோரிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

எனினும் பொலிஸார் முன்வைத்த கோரிக்கையை கடுவெல நீதவான் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

இதேவேளை, பாராளுமன்ற நுழைவு வீதிக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 12 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொல்துவ சந்திக்கு அருகாமையில் பாராளுமன்ற நுழைவு வீதியை மறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# நான் அன்று கூறியபோது மகிந்த செவிமடுக்கவில்லை

## ஹர்ஷ டி சில்வா



(கொழும்பு)

நான் அன்று கூறியபோது மகிந்த செவிமடுக்கவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

2020ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் பதில் உரையின் போது அமைச்சர் அலி சப்ரி இன்று (நேற்று) கூறியதையே தானும் கூறியதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் அலிசப்ரி நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் விசேட உரையாற்றினார்.

இதன்போது, சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்னதாகவே சென்றிருக்க வேண்டும் என்றும் இது ஒரு வரலாற்றுத் தவறு என்றும் கூறினார். அத்தோடு, வரி குறைப்பும் பாரிய தவறு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிலையில், நிதி அமைச்சர் தெரிவித்த கருத்துக்கு பதிலளித்து உரையாற்றியபோதே அலி சப்ரி கூறியதையே 2020ஆம் ஆண்டு தானும் கூறியதாக ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அப்போதைய நிதி அமைச்சரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ தனது பேச்சை எந்த வகையிலும் செவிமடுக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)

**பயிற்சியுடன் உடனடி வேலை வாய்ப்பு**
A/L எடுத்தவர்கள் மட்டும் - 6 மாத பயிற்சி

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-4270)
V2 TRAVELS
எமது கிளைகள்
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -15'000/-
● பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
● பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.
● வேலையின்போது ஆரம்ப சம்பளம் -20'000/-
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம்.
0777-068-777


**காணி விற்பனைக்கு**
யாழ்ப்பாணம் வசாவிளான் ஒட்டகப்புலத்தில் 15 பரப்புக் காணி
2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
- அச்சுவேலி - தெல்லிப்பளை பிரதான வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- பிரதான (காபற்) வீதியில் இருந்து 50m தூரத்தில்.
- ஒட்டகப்புலம் றோ.க.த.கலவன் பாடசாலைக்கு அருகாமையில்.
- 14 அடிப்பாதையுடன்.
- அச்சுவேலி பஸ் நிலையத்தில் இருந்து 2km தூரம்.
ஒரு பரப்பின் விலை: ஐந்து இலட்சம்
(11275)
☎-077 911 6983

**வாகனம் விற்பனைக்கு**
கிளிநொச்சி இரத்தினபுரத்தில் ஒரு பகுதி சேதமடைந்த TATA பிக்கப் வாகனம் விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
076 097 3121

**தேவை**
Video Editingஇல் முன்அனுபவம் உள்ள மற்றும் அலுவலக வேலைகளை செய்யக்கூடியவருமான 35 வயதிற்கு மேற்படாத ஆண், பெண் இருபாலாரும் தேவைப்படுகின்றனர். தங்கள் சுயவிபரக்கோவையை கீழ்க்காணும் முகவரிக்கும் மின்னஞ்சலுக்கும் 08.05.2022 இற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைக்கவும்.
**Skyline Holders (Pvt) Ltd**
No.89, Old Park Road, Jaffna.
SkylineHolders2021@gmail.com, 077 722 0095
(11276)

# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 06 . 1962



மறைவு
04 . 05 . 2022

## கதிரவேலு ஆனந்தசோதி

இணுவில் கிழக்கு, காரைக்கால் சிவன்கோவிலடியைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கு விவேகானந்த வீதி, மஞ்சத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆனந்தசோதி அவர்கள் நேற்று (04.05.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விவேகானந்த வீதி,
மஞ்சத்தடி, இணுவில் கிழக்கு. (11277)

தகவல்: குடும்பத்தினர்
077 921 4110

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org